# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2350 - 2023 සැප්තැම්බර් මස 15 වැනි සිකුරාදා - 2023.09.15

*2350 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 15ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (IIஆ) - விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | 1894 |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் | - |
| பொருட்கள் விற்பனவும் பிறவும் | 1897 |
| ஆய விற்பனையும் குத்தகையும் | - |
| உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் | 1898 |
| அந்நிய குடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள் | 1900 |
| ஏல விற்பனைகள் | 1902 |
| நானாவித அறிவித்தல்கள் | - |


### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான

### முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகுந் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பி வைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்கத் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2023, ஒற்றோபர் மாதம் 06 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2023,செத்தெம்பர் மாதம் 22 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.".

**கங்காணி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2023 ஆம் ஆண்டு சனவரி மாதம் 02 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*


1893 - B 082495 - 5,403 (2023/09)

# கேள்விப்பத்திர அறிவித்தல்கள்

## இலங்கைப் புகையிரத சேவைகள்

விலைமனுக்கான அழைப்பு

Procurements for the supply of 4,000 Nos. Less High Concrete Sleepers to Suit EN 45 E1 Rails for check Railed Track Between Kandy and Matale in Upper District - Sri Lanka Railways
IFB N.: SRS/ F.7914

01. இலங்கை புகையிரத சேவைகளின் மேல் மாவட்டத்தில் check Railed Track இற்காக EN 45 E1 தண்டவாளங்களுக்கு பொருத்தமான , கண்டி மற்றும் மாத்தளைக்கு இடையில் 4,000 எண்ணிக்கையான Less High Concrete Sleepers வழங்குவதற்காக உள்ளூர் உற்பத்தியாளர்கள்/ வழங்குநர்களிடமிருந்து கொழும்பு, இலங்கை புகையிரத சேவைகளின் சார்பாக திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை பெற்றுக் கொள்வார்.

02. விலைமனுக்கோரல் தேசிய போட்டி ரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் நடாத்தப்படும்.

03. ஆர்வமும் தகுதியுமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவலை பெற்று 2023.08.25 ஆந் திகதியிலிருந்து 2023.09.19 ஆந் திகதி வரையும் வார நாட்களில் (வேலை நாட்களில்) மு.ப. 9.00 மணியிலிருந்து பி.ப.3.00 மணி வரையும் கீழே வழங்கப்பட்டுள்ள முகவரியில் விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சிக்கலாம்.

பிரதிப் பொது முகாமையாளர் (பெறுகை),
புகையிரத பெறுகை உப திணைக்களம்,
ஒல்கொட் மாவத்தை, கொழும்பு 10, இலங்கை.
தொலைபேசி இலக்கங்கள்: 94(11)2438078 94(11) 2436818.
தொலைநகல் இலக்கம்: 94(11) 2432044
மின்னஞ்சல் : srs.sir@gmail.com
இணையத்தளம்: www.railway.gov.lk

04. கடந்த ஐந்து (5) வருடங்களில் விலைமனுதாரர் 50 மில்லியன் ரூபா பெறுமதியானதும் 5,000 எண்ணிக்கையானதுமான கொன்கிறீட் சிலீப்பர்களை அல்லது முன் அழுத்தப்பட்ட கொன்கிறீட் பீம்களை (Pre- stressed concrete beams) அல்லது 500 மில்லியன் ரூபா பெறுமதியுள்ள முன் - அழுத்தப்பட்ட கொன்கிறீட் தூண்களை (Pre - stressed concrete poles) வழங்கியிருப்பதுடன் அவற்றிற்கான விலைப்பட்டியல்களின் பிரதிகளையும் சமர்ப்பித்தல் வேண்டும்.

05. 2023.08.25 ஆந் திகதியிலிருந்து 2023.09.19 ஆந் திகதி வரையும் பி.ப. 3.00 மணி வரையும் மீளளிக்கப்படாத பெறுகைக் கட்டணமாக 28,250 ரூபாவை மாத்திரம் செலுத்திய பின்னர், இலங்கை, கொழும்பு-10, ஒல்கொட் மாவத்தை, புகையிரத பெறுகை உப திணைக்கள அலுவலக முகவரிக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம், ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம்.

06. அனைத்து விலைமனுக்களும் விலைமனுப்பிணையொன்றுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். விலைமனுப்பிணையின் தொகையானது 1,550,000.00 ரூபா என்பதுடன் இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்டதும் இலங்கையில் செயற்படும் வங்கியொன்றிலிருந்து வழங்கப்பட்டதான நிபந்தனையற்ற பிணை உத்தரவாதமுள்ள விலைமனுப்பிணையாகவும் இருத்தல் வேண்டும்.

07. விலைமனுக்கள் 2023.09.20 ஆந் திகதியன்று பி.ப.2.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் கீழேயுள்ள முகவரியில் ஒப்படைக்கப்படல் வேண்டுமெனபதுடன் அவைகளை மூடிய பின்னர் உடனடியாகவே திறக்கப்படும். விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் விலைமனுக்களை திறக்கும் வேளையில் சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். தாமதமான விலைமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

தலைவர்,
திணைக்களத்தின் பெறுகைக் குழு (உயர் மட்டம்),
இலங்கைப் புகையிரத சேவைகள்,
ஒல்கொட் மாவத்தை, கொழும்பு 10.

தலைவர்,
திணைக்களத்தின் பெறுகைக் குழு (உயர் மட்டம்),
இலங்கைப் புகையிரதசேவைகள்.

குறிப்பீட்டு இல.: SRS/F.7914.

09-199

**காணி அமைச்சு**

இலங்கை நில அளவைத் திணைக்களம்

**விலைமனுக் கோரல்**

***பிரதேச நில அளவை அலுவலகங்களுக்கு கட்டிடங்களை வாடகைக்குப் பெற்றுக்கொள்ளல் - 2023***

*கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள பிரதேச நில அளவை அலுவலகங்களுக்கு கட்டிடங்களை இரண்டு வருட காலத்திற்கு வாடகைக்குப் பெற்றுக்கொள்வதற்கு சம்பந்தப்பட்ட மாகாண நில அளவையாளர் நாயகங்களின் அலுவலகங்களில் மனுக்கோரல்கள் 2023.10.02ஆந் திகதியன்று பிற்பகல் 2.00 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும். அன்றைய தினம் விலைமனுக் கோரல்கள் பி. ப. 2.05 மணிக்கு திறக்கப்படும்.*

| *மாகாணம்* | *மாவட்டம்* | *பிரதேச நில அளவை அலுவலகம்* | *கேள்விமனு ஒப்படைத்தல்* | *அருகில் உள்ள நகரம்* | *தேவைப்படும் திகதி* |
|---|---|---|---|---|---|
| சப்பிரகமுவ மாகாணம் | இரத்தினபுரி | கலவான நகரம் | மாகாண நில அளவையாளர் நாயகம் (சப்பிரகமுவ மாகாணம்), மாகாண நில அளவையாளர் நாயகம் பொது அலுவலகம், புதிய நகரம், இரத்தினபுரி. | கலவானையைச் சுற்றியுள்ள நகரங்கள் | *2023.10.01* |
| தெற்கு மாகாணம் | காலி | பத்தேகம | மாகாண நில அளவையாளர் நாயகம் (தென் மாகாணம்), மாகாண நில அளவையாளர் நாயகம் அலுவலகம், காலி. | பத்தேகமையைச் சுற்றியுள்ள நகரங்கள் | *2024.01.01* |
| ஊவா மாகாணம் | பதுளை | வெலிமடை | மாகாண நில அளவையாளர் நாயகம் (ஊவா மாகாணம்), மாகாண நில அளவையாளர் நாயகம் அலுவலகம், பள்ளிய வீதி, பதுளை. | வெலிமடையைச் சுற்றியுள்ள நகரங்கள் | *2024.01.01* |
| ஊவா மாகாணம் | மொனராகலை | சியம்பலாண்டுவ நகரம் | மாகாண நில அளவையாளர் நாயகம் (ஊவா மாகாணம்), மாகாண நில அளவையாளர் நாயகம் அலுவலகம், பள்ளிய வீதி, பதுளை. | சியம்பலாண்டுவையைச் சுற்றியுள்ள நகரங்கள் | *2024.01.01* |

**பூரணப்படுத்தப்பட வேண்டிய பொதுவான தேவைப்பாடுகள்.**- அனைத்துக் கட்டிடங்களும் பாதுகாப்பு சுற்று மதில் அல்லது கம்பி வேலி மூலமாக பாதுகாக்கப்பட்டிருத்தல் வேண்டும். தண்ணீர் குழாய் வசதியினைக் கொண்டிருப்பதுடன் அழுக்குகள் மற்றும் வடிநீர் செல்வதற்கான முறையான வடிகாலமைப்பு இருத்தல் வேண்டும். தனியான நீர்மானி மற்றும் மின்மானி என்பன வேறு வேறாக பொருத்தப்பட்டிருத்தல் வேண்டும். உரிய இடத்திற்கு அண்மித்த பிரதேசங்களில் இருந்து அதிக ஒலியை எழுப்பக்கூடிய தொழிற்சாலைகளோ அல்லது அதுபோன்ற வேறு ஏதாவது பட்டறைகளோ இல்லாதிருத்தல் வேண்டும். கட்டிடம் ஸ்தாபிக்கப்பட்டிருப்பது பெருந்தெருவுக்கு அண்மித்ததாக இல்லாதிருப்பின் அதற்குச் செல்வதற்கு முறையான போக்குவரத்துப் பாதை இருத்தல் அவசியமாகும். குறைந்தது மூன்று வாகனங்களை நிறுத்துவதற்கான வசதிகள் மற்றும் வாகன தரிப்பிட வசதிகள் இருக்க வேண்டும். எல்லைக் கற்கள் தயாரிப்பதற்கான இட வசதி இருப்பதோடு ஆகக் குறைந்தது பத்து அலுவலர்கள் இருக்கக்கூடிய அறை

அல்லது இடவசதிகள் இருக்க வேண்டும். கட்டிடத்தின் பரப்பளவு குறைந்தது 2,500 சதுர அடி அல்லது அதற்கு மேற்பட்டதாக இருக்க வேண்டும்.

கீழே தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பத்திற்கமைவாக தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தினைப் பூரணப்படுத்த வேண்டிய பொதுவான தேவையான சகல விபரங்களுடனான மனுக்கோரல்கள் அது அடங்கிய தபாலுறையின் இடதுபக்க மேல் மூலையில் "பிரதேச நில அளவை அலுவலகங்களை வாடகைக்குப் பெறுதல் (இடத்தின் பெயர்)" எனக் குறிப்பிட்டு 2023.10.02ஆந் திகதியன்று பிற்பகல் 2.00 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக சம்பந்தப்பட்ட மாகாண நில அளவையாளர் நாயகம் அலுவலகத்திற்குப் பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்படவோ அல்லது நேரடியாக கையளிக்கப்படவோ வேண்டும்.

டபிள்யூ. சுதத் எல்.சீ. பெரேரா,
நில அளவையாளர் நாயகம்.

நில அளவையாளர் நாயகம் அலுவலகம்,
இலக்கம் 150, பெர்னாட் சொய்சா மாவத்தை, கொழும்பு 05,
2023.09.04.

**பிரதேச நில அளவை அலுவலகங்களுக்கு கட்டிடங்களை வாடகைக்குப் பெற்றுக்கொள்ளல் - 2023**

விலைமனுக் கோரல் விண்ணப்பப்படிவம் - 2023

**கட்டிட உரிமையாளரின் :**

01. முழுப்பெயர் :----------------------------------------------------------------------------------------------------.
02. முகவரி :-------------------------------------------------------------------------------------------------------.
03. தொலைபேசி இலக்கம் :---------------------------------------------------------------------------------------.
04. தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் :----------------------------------------------------------------------.

**கட்டிடம் தொடர்பாக :**

01. எந்த பிரதேச நில அளவை அலுவலகத்திற்காக கட்டிடம் வாடகைக்கு வழங்கப்படுகின்றது ? :--------------------------------
----------------------------------------------------------------------------------------------------------------.
02. மாதாந்த வாடகைத் தொகை :-----------------------------------------------.
03. ஸ்தாபிக்கப்பட்டுள்ள இடத்தின் முகவரி :---------------------------------------------------------------------------.
04. உரிய நகரத்தில் இருந்து ஸ்தாபிக்கப்பட்டுள்ள இடத்திற்கு உரிய தூர அளவு கி. மீ. :-----------------------------------------
05. இடத்தின் விஸ்தீரணம் :-----------------------------------------------------------------------------------------
06. கட்டிடத்தின் விஸ்தீரணம் வர்க்க அடியளவும் அறைகளின் எண்ணிக்கையும் தொடர்பான விபரங்கள் :-----------------------
07. தனியாக அவதானிக்கக்கூடிய நீர்மானி பொருத்தப்பட்டுள்ளதா ? :----------------------------------------------------.
08. தனியாக அவதானிக்கக்கூடிய மின்மானி பொருத்தப்பட்டுள்ளதா ? :---------------------------------------------------.
09. பாதுகாப்பு எல்லை தொடர்பான விபரம் (மதில்/கம்பி /வேலி) -------- :----------------------------------------------.
10. நிறுத்தி வைக்கக்கூடிய வாகனங்களின் எண்ணிக்கை ? :------------------------------------------------------------.
11. தொலைபேசி தொடர்பு உள்ளதா ? :--------------------------------------------------------.

மேலே என்னால் தரப்பட்டுள்ள தகவல்கள் யாவும் உண்மையானவை என்றும், வழங்கப்பட்டுள்ள தகவல்கள் தவறானது எனத் தெரியவரும் பட்சத்தில் என்னால் அனுப்பப்பட்டுள்ள இந்த விலைமனு நில அளவையாளர் நாயகத்தினால் நிராகரிக்கப்படும் என்பதனை நான் நன்கு அறிவேன் என்றும் இத்தால் அறியத்தருகிறேன்.

---------
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

09-215

# பொருட்கள் விற்பனவும் பிறவும்

## நீதிவான் நீதிமன்றம்- மட்டக்களப்பு
## பகிரங்க ஏல விற்பனைக்கான அறிவித்தல்

*மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்ற வழக்குகளில் பறிமுதல் செய்யப்பட்ட பின்வரும் பொருட்கள் எதிர்வரும் 2023.09.24 ஆந் திகதி காலை 9.00 மணிக்கு மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்ற வளாகத்தில் வைத்து பகிரங்க ஏல விற்பனை செய்யப்படவுள்ளன.*

*இந் நீதிமன்றப் பதிவாளரின் முன் அனுமதியுடன் அன்றைய தினம் காலை 8.00 மணி முதல் 9.00 மணி வரையான காலப்பகுதியினுள் இந்தப் பொருட்களைப் பார்வையிட முடியும். இந்தப் பொருட்களுக்கான விலையானது மதிப்பீட்டுப் பெறுமதிக்கு குறைவாக கேள்விக்குட்படுத்தப்படும் சந்தர்ப்பத்தில் இப் பொருட்களை ஏலத்திலிருந்து மீளப் பெறுவதற்கான அதிகாரம் இந் நீதிமன்றத்திற்கு உண்டு.*

*இந்தப் பொருட்களை ஏலத்தில் பெறுபவர்கள் அதற்கான பணத்தை உடனடியாக இம் மன்றில் செலுத்திய பற்றுச் சீட்டைப் பெற்ற பின்னர் அவற்றை உடனடியாக நீதிமன்ற வளாகத்த விட்டும் அப்புறப்படுத்தப்படல் வேண்டும். இதன் போது காசோலைகள் மற்றும் காசுக்கட்டளைகள் எதுவும் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.*

*ஏல விற்பனை தொடர்பில் ஏதும் முறைப்பாடுகள் தெரிவிப்பதாயின் ஏல விற்பனை இடம்பெறும் சந்தர்ப்பத்திலேயே தெரிவிக்க வேண்டும் என்பதுடன் ஏலவிற்பனையின் பின்னர் தெரிவிக்கப்படும் எந்தவித முறைப்பாடுகளும் கவனத்தில் கொள்ளப்பட மாட்டாது.*

*ஏல விற்பனையில் பங்குபற்ற விரும்புபவர்கள் தங்களது தேசிய அடையாள அட்டை அல்லது ஆளடையாளத்தை உறுதிப்படுத்தக்கூடிய ஆவணங்களுடன் சமுகமளித்தல் வேண்டும்.*

*நீதிவான்.*

*நீதிவான் நீதிமன்றம்,*
*மட்டக்களப்பு,*
*2023.08.28.*

**சான்றுப் பொருட்களின் விபரம்**

| *S.No.* | *CASE No.* | *REGISTRATION No.* | *CATEGORY* | *NO OF ITEMS* | *VALUATION AMOUNT* |
|---|---|---|---|---|---|
| 01. | 68220/ 5/ 2023 | EP- BIX- 2829 | மோட்டார் சைக்கிள் | 01 | 85000.00 |
| 02. | AR/ 953/2022 | EP- BGU- 0606 | மோட்டார் சைக்கிள் | 01 | 70000.00 |
| 03. | 64179/ MT/2021 | EP- MO- 5140 | மோட்டார் சைக்கிள் | 01 | 60000.00 |
| 04. | 64719/ MT/2021 | EP- BCS- 3195 | மோட்டார் சைக்கிள் | 01 | 75000.00 |
| 05. | AR/ 694/2023 | - | தோணி | 01 | 10000.00 |
| 06. | AR/ 694/2023 | - | தோணி | 01 | 7000.00 |
| 07. | AR/ 694/2023 | - | துவிச்சக்கர வண்டி | 01 | |
| 08. | AR/ 883/2022 | - | துவிச்சக்கர வண்டி | 01 | |
| 09. | AR/ 883/2022 | - | கையடக்கத் தொலைபேசி | 02 | |
| 10. | AR/ 826/2022 | - | துவிச்சக்கர வண்டி | 01 | |
| 11. | AR/ 826/2022 | - | துவிச்சக்கர வண்டி | 01 | |
| 12. | AR/ 826/2022 | - | துவிச்சக்கர வண்டி | 01 | |
| 13. | AR/ 851/2022 | - | துவிச்சக்கர வண்டி | 01 | |
| 14. | AR/ 129/2022 | - | துவிச்சக்கர வண்டி | 01 | |

| *S.No.* | *CASE No.* | *REGISTRATION No.* | *CATEGORY* | *NO OF ITEMS* | *VALUATION AMOUNT* |
|---|---|---|---|---|---|
| 15. | AR/ 882/2022 | - | துவிச்சக்கர வண்டி | 01 | |
| 16. | 60548/EX/2020 | - | சிலிண்டர் | 01 | |
| 17. | 60548/EX/2020 | - | சிலிண்டர் | 01 | |
| 18. | 52938/EX/2020 | - | சிலிண்டர் | 01 | |
| 19. | 52938/EX/2020 | - | அடுப்பு | 01 | |
| 20. | 52938/EX/2020 | - | சிலிண்டர் | 01 | |
| 21. | 68595/S/2023 | - | சவள் | 01 | |
| 22. | 67132/S/2023 | - | சவள் | 01 | |
| 23. | 68712/S/2023 | - | சவள் | 01 | |
| 24. | 69464/S/2023 | - | தராசு | 01 | |
| 21. | 69462/S/2023 | - | தராசு | 01 | |
| 21. | 69459/S/2023 | - | தராசு | 01 | |
| 21. | 69453/S/2023 | - | தராசு | 01 | |
| 21. | 69455/S/2023 | - | தராச் | 01 | |
| 21. | 69456/S/2023 | - | தராசு | 01 | |
| 21. | 69463/S/2023 | - | தராசு | 01 | |
| 21. | 69464/S/2023 | - | தராசு | 01 | |
| 32. | 69705/S/2023 | - | துவிச்சக்கர வண்டி பாட்ஸ் | 01 | |
| 33. | 69578/S/2023 | - | சுவிச் | 09 | |

*09-234*

---

## உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள்

### பொது அறிவித்தல்

### *சன்ஷைன் டீ ( பிறைவட்) லிமிட்டெட்*

(Reg.No. PV ***204)***

*2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் (திருத்தப்பட்டவாறு) 242(3)* (b) *ஆம் பிரிவின் பிரகாரம் கூறப்பட்ட அந்த சட்டத்தின் 242(1) ஆம் பிரிவின் விதிகளில் உள்ளவாறு இல. 60, தர்மபால மாவத்தை, கொழும்பு 03 இன் சன்ஷைன் டீ (பிறைவெட்) லிமிடெட் ,* (Reg.No. PV ***204)*** *உடன் இல. 60, தர்மபால மாவத்தை, கொழும்பு 03 இன் கோர்டன் பிரேசர் போசன்கேட் அன்ட் ஸ்க்ரைன் லிமிடெட்* (Reg.No. PB ***1192)*** *இன் முன்மொழியப்பட்ட கூட்டிணைப்பு தொடர்பாக இத்தால் அறியத்தரப்படுகிறது.*

*கம்பனி சட்டத்தின் 242(1) ஆம் பிரிவின் கீழ் சன்ஷைன் டீ ( பிறைவெட்) லிமிடெட்* (SST) *உடன் கோர்டன் பிரேசர் போசன்கேட் அன்ட் ஸ்க்ரைன் லிமிடெட் (கோர்டன் ) இன் கூட்டிணைப்பு சபை தீர்மானத்தின்படி நிறைவேற்றப்பட்டதோடு, கோர்டனின் இருப்பு நிறுத்தப்பட்டு* SST *தொடர்ந்து இயங்கும் வகையில்* SST *மற்றும் கோர்டன் பணிப்பாளர்களினால் 2023, யூலை 25 ஆந் திகதி கையொப்பமிடப்பட்டு அங்கீகரிக்கப்பட்டதோடு இதன் விளைவாக கூட்டிணைக்கப்பட்ட நிறுவனமாக இருக்கும்.*

*இந்த அறிவித்தலின் திகதியில் இருந்து 20 வேலை நாட்களின் பின் பதிவுக்காக நிறுவனங்களின் நிறுவன பதிவாளர் சட்டத்தின் 243 ஆவது பிரிவில் குறிப்பிடப்பட்ட ஆவணங்களை* SST *மற்றும் கோர்டன் ஆகியன சமர்ப்பிக்க வேண்டியுள்ளது.*

*இந்தக் கூட்டிணைப்பானது சட்டத்தின் 244(2) ஆம் பிரிவின் விதிகளின்படி 2023, செத்தெம்பர் 27 ஆந் திகதி செயற்படவுள்ளது.*

*சன்ஷைன் டீ (பிறைவட்) லிமிட்டெட் இன் பணிப்பாளர் சபை ஆணைப்படி,*

*பிஸ்னஸ் இன்டெலிஜன்ஸ் ( பிறைவெட்) லிமிடெட் ,*
*நிறுவன செயலாளர்கள்.*

*இல.08, டிக்கேல் வீதி,*
*கொழும்பு 08,*
*2023, யூலை 27.*

*09- 255*

---

**பொது அறிவித்தல்**

**கோர்டன்பிரேசர் போசன்கேட் அன்ட் ஸ்கைரைன் லிமிடெட்**

(Reg.No. PB ***1192)***

*2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் (திருத்தப்பட்டவாறு) 242(3)* (b) *ஆம் பிரிவின் பிரகாரம் கூறப்பட்ட அந்த சட்டத்தின் 242(1) ஆம் பிரிவின் விதிகளில் உள்ளவாறு இல. 60, தர்மபால மாவத்தை, கொழும்பு 03 இன் சன்ஷைன் டீ (பிறைவெட்) லிமிடெட் ,* (Reg.No. PV ***204)*** *உடன் இல. 60, தர்மபால மாவத்தை, கொழும்பு 03 இன் கோர்டன் பிரேசர் போசன்கேட் அன்ட் ஸ்க்ரைன் லிமிடெட்* (Reg.No. PB ***1192)*** *இன் முன்மொழியப்பட்ட கூட்டிணைப்பு தொடர்பாக இத்தால் அறியத்தரப்படுகிறது.*

*கம்பனி சட்டத்தின் 242(1) ஆம் பிரிவின் கீழ் சன்ஷைன் டீ ( பிறைவெட்) லிமிடெட்* (SST) *உடன் கோர்டன் பிரேசர் போசன்கேட் அன்ட் ஸ்க்ரைன் லிமிடெட் (கோர்டன் ) இன் கூட்டிணைப்பு சபை தீர்மானத்தின்படி நிறைவேற்றப்பட்டதோடு, கோர்டனின் இருப்பு நிறுத்தப்பட்டு* SST *தொடர்ந்து இயங்கும் வகையில்* SST *மற்றும் கோர்டன் பணிப்பாளர்களினால் 2023, யூலை 25 ஆந் திகதி கையொப்பமிடப்பட்டு அங்கீகரிக்கப்பட்டதோடு இதன் விளைவாக கூட்டிணைக்கப்பட்ட நிறுவனமாக இருக்கும்.*

*இந்த அறிவித்தலின் திகதியில் இருந்து 20 வேலை நாட்களின் பின் பதிவுக்காக நிறுவனங்களின் நிறுவன பதிவாளர் சட்டத்தின் 243 ஆவது பிரிவில் குறிப்பிடப்பட்ட ஆவணங்களை* SST *மற்றும் கோர்டன் ஆகியன சமர்ப்பிக்க வேண்டியுள்ளது.*

*இந்தக் கூட்டிணைப்பானது சட்டத்தின் 244(2) ஆம் பிரிவின் விதிகளின்படி 2023, செத்தெம்பர் 27 ஆந் திகதி செயற்படவுள்ளது.*

கோர்டன் பிரேசர் போசன்கேட் அன்ட் ஸ்க்ரைன் லிமிட்டெட் இன் பணிப்பாளர் சபை ஆணைப்படி,

*பிஸ்னஸ் இன்டெலிஜன்ஸ் ( பிறைவெட்) லிமிடெட் ,*
*நிறுவன செயலாளர்கள்.*

*இல.08, டிக்கேல் வீதி,*
*கொழும்பு 08,*
*2023, யூலை 27.*

*09- 256*

**கம்பனியின் பெயர் மாற்றல் பொது அறிவித்தல்**

*2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(2)ஆம் பிரிவின் பிரகாரம்.-*

*கம்பனியின் முந்தைய பெயர்:* பயோசென்ஸ் டெக்னொலொஜீஸ் (பிரைவட்) லிமிட்டட்
*பதிவு இலக்கம்:* PV 62134
*முகவரி:* இல. 260, கங்காராம வீதி, வேரஹெர, பொரலஸ்கமுவ
*கம்பனியின் புதிய பெயர்:* அனலிட்டிக்கல் இன்ஸ்ருமென்ட்ஸ் டெக் ( பீவீட) எல்டீடி

செக்ரடேரியஸ் ( பிறைவட்) லிமிடட்.

PV 5958

09-292

---

# அந்நியகுடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள்

## உடபலாத்த பிரதேச செயலாளர் பிரிவு

2024 ஆம் ஆண்டுக்கான வெளிநாட்டு மதுபான தவறணைகளை குத்தகைக்கு வழங்கல்

2024 ஆம் ஆண்டிற்குரிய வகையில் 2023.08.22 ஆந் திகதி மு.ப. 10.30 மணிக்கு உடபலாத்த பிரதேச செயலகத்தில் நடாத்தப்பட்ட வெளிநாட்டு குடிபானத் தவறணைகளை குத்தகைக்கு விடும் நடவடிக்கையின் போது கேள்வி அறிவித்தல் சபை திருப்தியுரும் வகையில் கேள்வி அறிவித்தல் விலைமனுக்கள் முன்வைக்கப்படாமையின் காரணமாக மேற்படி வெளிநாட்டுக் குடிபானத் தவறணைகளை மீண்டும் குத்தகைக்கு விட மதுவரிகள் ஆணையாளர் நாயகம் அவர்களால் தீர்மானிக்கப்பட்டுள்ளதுடன் அதற்குரிய அறிவித்தல் மற்றும் நிபந்தனைகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

02. 1982ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 20 ஆந் திகதிய 207 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டு விளம்பரப்படுத்தப்பட்ட 1983 ஆம் ஆண்டிற்கும் அதற்கு பிற்பட்ட காலப் பகுதிக்கும், ஏற்புடையதான வெளிநாட்டு மதுபான வகைகளை விற்கும் நிபந்தனைகளுக்கும், அக்காலப் பகுதியில் நடைமுறை வலுவுடையதான அனைத்து மதுவரி அனுமதிப்பத்திரங்களுக்கும் பொருந்தும் பொதுவான மதுவரி நிபந்தனைகளுக்கும் ஏற்ப 2024 ஆம் ஆண்டின் வெளிநாட்டுக் குடிவகைகளை சில்லறைக்கு விற்கும் சிறப்புரிமைகளை கொள்வனவு செய்வதற்காக உடபலாத்த பிரதேச செயலாளரான என்னால் 2023.09.19ஆந் திகதி மு. ப. 10.30 மணி வரை கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

03. அனைத்து கேள்விப்பத்திரங்களும் இலங்கையில் காணப்படும் ஏதாவதொரு பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ளும் விண்ணப்பப்படிவத்தில் தயாரிக்கப்படல் வேண்டும் என்பதுடன்,

(அ) கேள்விப் பிணைப்பணமாக கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிட்டு குறித்த பிணைப் பணத்தொகையை இலங்கையில் உள்ள ஏதாவது ஒரு பிரதேச செயலகத்தில் வைப்புப் பணமாக வைப்பிலிட்டு பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டையும் மற்றும்

(ஆ) கேள்விப்பத்திரதாரரின் காணிகள் போன்ற அசையா சொத்துக்கள் அமைந்துள்ள பிரதேசத்தின் பிரதேச செயலாளரினால் பெற்றுக் கொண்ட தனது சொத்துக்களைப் பற்றிய சான்றிதழ் ஒன்றினைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

கேள்விப்பத்திரம் மற்றும் சொத்துக்கள் தொடர்பான சான்றிதழ்கள் சமர்ப்பிப்பது தொடர்பாக மேற்படி வெளிநாட்டு மதுபான தவறணைகளை குத்தகைக்கு விற்கும் நிபந்தனைகள் கோவையில் உள்ளடக்கப்பட்டுள்ள நியதிகளைச் சரியான முறையில் பின்பற்றப்பட வேண்டும் என கேள்விப்பத்திரங்களைச் சமர்ப்பிப்பவர்களிடம் இத்தால் ஆணித்தரமாக அறிவிக்கப்படுகின்றது.

கேள்விப்பத்திரங்களை நிரப்பும்போது கேள்விப்பத்திரதாரர்கள் கீழ்வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட கவனம் செலுத்துதல் வேண்டும் :

(i) கேள்விப்பத்திரங்கள் முழுமையாக நிரப்பப்படல் வேண்டும். அவ்வாறு நிரப்பும்போது அங்கு குறிப்பிடப்படும் தொகையை இலக்கத்திலும் எழுத்திலும் குறிப்பிடப்படுதல் வேண்டும் ;

(ii) நிரப்பப்பட்ட கேள்விப்பத்திரங்களில் உரிய சாட்சியாளர்களின் கையொப்பம் இடப்பட்டிருத்தல் வேண்டும் ;

(iii) அனைத்து திருத்தங்களும் சொற்கள் வெட்டப்பட்டிருந்தாலும் கேள்விப்பத்திரதாரரின் சுருக்கக் கையொப்பம் மற்றும் திகதி இட்டு உறுதிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

இங்கு நியதிகளுக்குப் புறம்பான வகையில் சமர்ப்பிக்கப்படும் கேள்விப்பத்திரங்கள் நிராகரிக்கப்படும்.

04. முறையாக நிரப்பிய கேள்விப்பத்திரங்கள்.-

(அ) கேள்வி வைப்புப் பணம் வைப்பிலிட்டுப் பெற்றுக்கொண்ட பிரதேச செயலகத்தின் பற்றுச்சீட்டு மற்றும்

(ஆ) சொத்துக்கள் பற்றிய சான்றிதழ்.

என்பன இணைக்கப்பட்டு கடித உறையொன்றில் இட்டு முத்திரையிட்டு, அத்தகைய கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "தவறணையின் இலக்கமும் பெயரும்" குறிப்பிட்டு உடபலாத்த பிரதேச செயலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் கேள்விப்பத்திரங்களை ஏற்றுக்கொள்ளும் கால எல்லை முடிவடைவதற்கு முன்பு இடுதல் வேண்டும். இல்லாவிட்டால் கேள்விப்பத்திரங்களை ஏற்றுக்கொள்ளும் காலவரையறை முடிவடைவதற்கு முன்பு உடபலாத்த பிரதேச செயலாளருக்கு கிடைக்கும்படி பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

05. ஒவ்வொரு குத்தகையும் தொடர்பாக கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளும் முடிவு நேரம் கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளது. அத்தகைய நேரங்களில் அனைத்து கேள்விப்பத்திரதாரரும் உடபலாத்த பிரதேச செயலகத்திற்கு சமுகமளித்திருத்தல் வேண்டும்.

06. திருப்தியான கேள்விப்பத்திரத்தை முன்வைத்த கேள்விப்பத்திரதாரரின் "சிறப்புரிமைகளை வழங்கியவர்" என பிரகடனப்படுத்தப்பட்ட பின்னர் அன்றைய திகதி பி. ப. 2.30 மணிக்கு முன்பு உடபலாத்த பிரதேச செயலாளரினால் விதிக்கப்படும் பணத்தொகையொன்றை பிணைப்பணமாக உடபலாத்த பிரதேச செயலகத்தில் வைப்பிலிட்டு உரிய வெளிநாட்டு மதுபான வகைகள் தவறணைகள் விற்பனை செய்யும் நிபந்தனைப் படிவத்தில் கையொப்பமிடல் வேண்டும். இக்கொடுப்பனவை ரொக்கப் பணமாகவோ அல்லது வங்கியொன்றினால் வழங்கப்பட்ட "கொடுப்பனவுக்காக" எனக் குறிப்பிட்ட காசோலை ஒன்றினால் அல்லது இலங்கை வங்கியிலோ அல்லது மக்கள் வங்கியிலோ வழங்கப்பட்ட "பாதுகாப்பான காசோலை" என அழைக்கப்படும் காசோலையினாலோ செலுத்தப்படல் வேண்டும்.

7. மேலதிக விபரங்களை உடபலாத்த பிரதேச செயலகத்தில் கேட்டு அறிந்துகொள்ளலாம்.

ஆத்மா டிலுக்ஷி ஜயரத்ன,
பிரதேச செயலாளர்,
உடபலாத்த- கம்பளை.

பிரதேச செயலகம்,
உடபலாத்த,
கம்பளை,
2023.08.31.

**அட்டவணை**

2024ஆம் ஆண்டுக்கான கம்பளை உடபலாத்த பிரதேச செயலாளர் பிரிவில் அங்கீகரிக்கப்பட்ட வெளிநாட்டு மதுபான தவறணைகளின் பட்டியல்

| தொடர் இலக்கமும் பெயரும் | பிரிவு | தவறணை அமைய வேண்டிய பிரதேசம் | தவறணை திறந்திருக்க வேண்டிய நேரங்கள் | கேள்விப்பத்திரம் ஏற்றுக் கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | கேள்வி வைப்புத் தொகை ரூ. ச. |
|---|---|---|---|---|---|
| 1. புஸ்ஸெல்லாவ வெளிநாட்டு மதுபானத் தவறணை | உடபலாத்த | புஸ்ஸெல்லாவ நகரத்தின் எல்லைக்குள் | மு. ப. 11.00 மணியில் இருந்து பி. ப. 2.00 மணி வரை பி. ப. 5.00 மணியில் இருந்து பி. ப. 8.00 மணி வரை | 2023.09.19ஆந் திகதி மு. ப. 10.30 மணி | 3,000 |

09- 222

# ஏல விற்பனைகள்

**சம்பத் வங்கி பீஎல்சீ**

(முன்பு சம்பத் வங்கி லிமிடெட் என அழைக்கப்பட்டது)

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 09 ஆம் பிரிவின் கீழான விற்பனை அறிவித்தல்*

என்.எஸ். அமரசேக்கர.
கணக்கு இல.: 1998 5600 0045

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 04ஆம் பிரிவின் கீழ் சம்பத் வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையினால் 2023.05.25ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக 2023.06.30ஆந் திகதிய இலங்கை வர்த்தமானியிலும் (Gazette) 2023.06.19ஆந் திகதிய ''திவயின'' (Divaina), ''ஐலண்ட்'' (Island), மற்றும் 2023.06.20 ஆச் திகதி ''தினக்குரல்'' (Thinakkural) ஆகிய பத்திரிகைகளில் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கிணங்க நிலுவை முதலான எழுபத்து இரண்டாயிரத்து எண்பத்து இரண்டு அவுஸ்திரேலிய டொலர்கள் மற்றும் முப்பத்து நான்கு சென்ட்கள் (AUD 72,082.34) 2019, சனவரி 03 ஆந் திகதி முதல் அறவிடப்படவேண்டிய மொத்தத் தொகையைச் செலுத்தித் தீர்க்கும் திகதி வரை அறுபத்தி ஒன்பதாயிரத்து முந்நூற்று இருபத்து எட்டு அவுஸ்திரேலிய டொலர்கள் மற்றும் இரண்டு சென்ட்கள் (AUD 69,328.02) மூன்று மாதங்களுக்கு லண்டன் இண்டர் பேங்க் (London Inter Bank) வழங்கும் வட்டி விகிதம் + வருடாந்தம் நூற்றுக்கு ஐந்து தசம் ஐந்து வீதம் (LIBOR + 5.5%) வருடாந்தம் (Floor rate ஆறு வீதம் (6% p. a.) கட்டணத்துடன் வருமதியாகவுள்ள வட்டியுடன், விளம்பரச் செலவுகள், ஏனைய செலவுகள், ஏதேனும் கட்டணங்கள் செலுத்தப்பட்டிருப்பின் அவற்றையும் கழித்து அறவிட்டுக் கொள்வதற்கு கூறப்பட்ட ஈட்டு முறி இல. 1309 இன் மீது பிணையாக வைக்கப்பட்டுள்ள சொத்துக்கள், நிலமனைகளை கொழும்பு உத்தரவுபெற்ற ஏலதாரர்களான பீ. கே. ஈ. சேனாபத்தி என்பவர்கள் மூலமாக 2023.10.25 ஆந் திகதி பி.ப. 2.30 மணி முதல் அதே இடத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் என இத்தால் தீர்மானிக்கின்றது.

**மேற்குறிப்பீடு செய்யப்பட்ட அட்டவணை**

1. மத்திய மாகாணம், கண்டி மாவட்டம், உடுகம்பாஹா கோரளே குண்டசாலை பிரதேச சபை மற்றும் பிரதேச செயலாளர் பிரிவு எல்லைகளுக்குள் தியபுபுல - இல. 703 கிராம அலுவலர் பிரிவின் கெங்கல்லையில் அமைந்த ''அங்கன்தென்ன எஸ்டேட் மற்றும் அங்கெதென்ன எனும் அன்கந்துரெவத்த எஸ்டேட்'' என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நில அளவையாளர் R. R. J. R. ஜயகொடி என்பவரால் தயாரிக்கப்பட்ட 2007, யூன் 27 ஆந் திகதியிடப்பட்ட இல. 100B எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் 2/246 என குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன - வடக்கிற்கு: லொட் 2/ 245; கிழக்கிற்கு: வீதி (R25) ; தெற்கிற்கு: லொட் 2/ 247 மற்றும் மேற்கிற்கு: லொட் 2/200, ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் பதின் மூன்று தசம் ஆறு மூன்று பேர்ச் (0ஏ.0றூ.13.63பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும், நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் கூறப்பட்ட இல. 100B எனும் வரைபடத்திற்கு அமைவாக கண்டி காணிப் பதிவகத்தில் பரிமாணம்/பக்கம் D 130/57 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

2. மேற்கூறப்பட்ட கெங்கல்லையில் அமைந்த ''அங்கன்தென்ன எஸ்டேட் மற்றும் அங்கெதென்ன எனும் அன்கந்துரெவத்த எஸ்டேட்'' என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நில அளவையாளர் R. R. J. R. ஜயகொடி என்பவரால் தயாரிக்கப்பட்ட 2007, யூன் 27 ஆந் திகதியிடப்பட்ட இல. 100B எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் 2/ 247 என குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன - வடக்கிற்கு: லொட் 2/246 ; கிழக்கிற்கு: வீதி (R25) ; தெற்கிற்கு: லொட் 2/291 மற்றும் மேற்கிற்கு: லொட் 2/291, ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் பதின் ஆறு தசம் ஒன்பது பேர்ச் (0ஏ.0றூ.16.9பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும், நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் கூறப்பட்ட இல. 100B எனும் வரைபடத்திற்கு அமைவாக கண்டி காணிப் பதிவகத்தில் பரிமாணம்/பக்கம் D 134/31 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

மேற் கூறப்பட்ட இல. 100B எனும் வரைபடத்தின் லொட் R25 மற்றும் உத்தரவுபெற்ற நில அளவையாளர் I. விஜேகோன் என்பவரால் தயாரிக்கப்பட்ட இல. 531 A எனும் வரைபடத்தின் லொட் R1 இன் மீதும் அதன் ஊடாகவும் அதன் கீழும் பிரவேசிப்பதற்கான மார்க்க உரிமைகளுடனானது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கம்பனிச் செயலாளர்.

09-280

## சம்பத் வங்கி பீஎல்சீ

(முன்பு சம்பத் வங்கி லிமிட்டெட் என அழைக்கப்பட்டது)

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 09 ஆம் பிரிவின் கீழான விற்பனை அறிவித்தல்*

1. 2 கே கன்ஸ்ட்டிறக்ஷன் (பிறைவெட்) லிமிட்டெட்.
கணக்கு இல. :0227 1000 0046
2. 2கேஃபுட் பொறொடக்ட்ஸ் (பிறைவெட்) லிமிட்டெட்
கணக்கு இல.: 0227 1000 0038

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 04ஆம் பிரிவின் கீழ் சம்பத் வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையினால் 2023.05.25ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக 2023.07.14ஆந் திகதிய இலங்கை வர்த்தமானியிலும் (Gazette) 2023.07.07ஆந் திகதிய “திவயின” (Divaina), “ஐலண்ட்” (Island), “தினக்குரல்” (Thinakkural) ஆகிய பத்திரிகைகளில் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கிணங்க நிலுவை முதலான இரண்டு கோடியே ஐம்பத்தைந்து இலட்சத்து நாற்பத்தாறாயிரத்து ஐந்நூற்று தொண்ணூற்று இரண்டு ரூபா மூன்று சதம் (ரூபா 25,546,592.03) 2023, மே 10 ஆந் திகதி முதல் அறவிடப்பட வேண்டிய மொத்தத் தொகையைச் செலுத்தித் தீர்க்கும் திகதி வரை இருபது இலட்சம் ரூபா (ரூபா 2,000,000.00) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றிற்கு பதினாறு தசம் ஐந்து வீதம் (16.5%) மேலும் ஒரு கோடியே ஐம்பது இலட்சம் ரூபா (ரூபா 15,000,000.00) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றிற்கு பதின்மூன்று வீதம் (13%) மேலும் நான்கு இலட்சத்து தொண்ணூற்று ஆறாயிரத்து அறுநூற்று அறுபத்து இரண்டு ரூபா அறுபத்தைந்து சதம் (ரூபா 496,662.65) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றிற்கு பதினாறு தசம் ஐந்து வீதம் (16.5%) வருமதியாகவுள்ள வட்டியுடன், விளம்பரச் செலவுகள், ஏனைய செலவுகள், ஏதேனும் கட்டணங்கள் செலுத்தப்பட்டிருப்பின் அவற்றையும் கழித்து அறவிட்டுக் கொள்வதற்கு கூறப்பட்ட ஈட்டு முறி இலக்கங்கள் 1254, 09, 909 மற்றும் 11 இன் மீது பிணையாக வைக்கப்பட்டுள்ள சொத்துக்கள், நிலமனைகளை சொழும்பு உத்தரவுபெற்ற ஏலதாரர்களான பீ. கே. ஈ. சேனாபத்தி என்பவர்கள் மூலமாக அட்டவணை 01 இல் குறிப்பிடப்பட்ட சொத்துக்கள் நிலமனைகளை 2023.10.11 ஆந் திகதி பி.ப.3.30 மணி முதல் மற்றும் அட்டவணை 02 இல் குறிப்பிடப்பட்ட சொத்துக்கள் நிலைமனைகளை 2023.10.11 ஆந் திகதி பி.ப. 1.30 மணி முதல் அதே இடத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் என இத்தால் தீர்மானிக்கின்றது.

### மேற்குறிப்பீடு செய்யப்பட்ட அட்டவணை

1. மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், அலுத்குரு கோரளே ராகம் பத்துவின் கம்பஹா நகர சபை மற்றும் பிரதேச செயலாளர் பிரிவு எல்லைகளுக்குள் மெதகம கிராம அலுவலர் பிரிவின் மெதகம கிராமத்தில் அமைந்த “மெதெல்லகும்புர மற்றும் மெதெல்லகும்புர பில்லேவ” என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நில அளவையாளர் A. P. விக்ரமசிங்ஹ என்பவரால் தயாரிக்கப்பட்ட 2013, பெப்புருவரி 23 ஆந் திகதியிடப்பட்ட இல. 4299 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் 1B எனக் குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன: வடக்கு: விசாகா வீதி ; கிழக்கு : லொட் 1A, S. சமரவீர மற்றும் S. A. S. திஸாநாயக்க என்பவர்கள் உரிமம் கோரும் காணிகள் ; தெற்கு: R. S. W. சேனாதிபத்தி உரிமம் கோரும் வயல்வெளி ; மற்றும் மேற்கு : இல. 1686 எனும் கூறப்பட்ட வரைபடத்தின் லொட் 1, ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் பதினாறு தசம் மூன்று ஏழு பேர்ச் (0ஏ. 0றூ. 16.37பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும், நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் மற்றும் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் கூறப்பட்ட இல. 4299 எனும் வரைபடத்திற்கு அமைவாக கம்பஹா காணிப் பதிவகத்தில் பரிமாணம்/ பக்கம் P 38/ 119 இன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

2. வடமேல் மாகாணம், குருநாகல் மாவட்டம், பலதோர கோரளே கொபெய்கனே பிரதேச சபை எல்லைக்குள் மற்றும் குருநாகல் பிரதேச செயலாளர் பிரிவின் வந்துரெஸ்ஸ கிராம அலுவலர் பிரிவின் வந்துரெஸ்ஸ கிராமத்தில் அமைந்த “கஹாட்டகஹாமுலஹேன” என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நில அளவையாளர் H. M. S. பிரியதர்ஷன என்பவரால் தயாரிக்கப்பட்ட 2014, மாச்சு 09 ஆந் திகதியிடப்பட்ட இல. 2014/315 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் 1 எனக் குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன - வடக்கு: R. M. K. ராஜகருணா உரிமம் கோரும் காணி (FVP 1567 இன் லொட் 233) ; கிழக்கு : வீதி (FVP 1567 இன் லொட் 231) ; தெற்கு : பிரதான வீதி R. D. A. ; மற்றும் மேற்கு : A. A. சுனில் ரேமண்ட் உரிமம் கோரும் காணி (FVP 1567 இன் லொட் 232), ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் ஒரு றூட் மற்றும் பன்னிரெண்டு தசம் நான்கு பேர்ச் (0ஏ. 1றூ. 12.4பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும், நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் மற்றும் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் கூறப்பட்ட இல. 2014/315 எனும் வரைபடத்திற்கு அமைவாக நிக்கவெரட்டிய காணிப் பதிவகத்தில் பரிமாணம்/ பக்கம் Nika/Kobe 24/ 76 இன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

கூறப்பட்ட லொட் 1 கீழே நேர்த்தியாக விபரிக்கப்பட்ட காணியின் மீள் அளவீடாகும் :

மேற்கூறப்பட்ட வந்துரெஸ்ஸ கிராமத்தில் அமைந்த அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டின் எல்லைகளாவன: வடக்கு: R. M. K. ராஜகருணா உரிமம் கோரும் காணி ; கிழக்கு : வீதி ; தெற்கு : பிரதான வீதி மற்றும் மேற்கு : A. A. சுனில் ரேமண்ட் உரிமம் கோரும் காணி, ஆகிய

இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் ஒரு றூட் மற்றும் இருபது பேர்ச் (0ஏ. 1றூ. 20பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும், நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் மற்றும் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் நிக்கவெரட்டிய காணிப் பதிவகத்தில் பரிமாணம்/பக்கம் D 49/6334/97 இன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கம்பனிச் செயலாளர்.

09-279

---

**சம்பத் வங்கி பீஎல்சீ**

(முன்பு சம்பத் வங்கி லிமிட்டெட் என அழைக்கப்பட்டது)

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 09 ஆம் பிரிவின் கீழான விற்பனை அறிவித்தல்

ராஜகருணா மோட்டர் டிரேடார்ஸ் ( பிறைவெட்) லிமிட்டெட்.
கணக்கு இல. : 0073 1000 1109
எச்.எம்.ஆர்.சீ. ஶ்ரீ ராஜகருணா மற்றும் ஜீ. ஈ.எம். என். ஏக்கநாயக்க .
கணக்கு இல.: 1073 5489 0636

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 04ஆம் பிரிவின் கீழ் சம்பத் வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையினால் 2019.06.27ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக 2019.08.09ஆந் திகதிய இலங்கை வர்த்தமானியிலும் (Gazette) 2019.07.26ஆந் திகதிய "திவயின" (Divaina), "ஐலண்ட்" (Island), "தினக்குரல்" (Thinakkural) ஆகிய பத்திரிகைகளில் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கிணங்க நிலுவை முதலான முப்பத்திரண்டு கோடியே எழுபது இலட்சத்து எண்பத்திரண்டாயிரத்து எண்ணூற் றுப்பதினைந்து ரூபா முப்பத்தேழு சதம் (ரூ. 32,70,82,815.37) 2019, யூன் 13 ஆந் திகதி முதல் அறவிடப் பட வேண்டிய மொத்தத் தொகையைச் செலுத்தித் தீர்க்கும் திகதி வரை தொண்ணூற்றுமூன்று இலட்சத்து இருபத்தெட்டாயிரம் ரூபா (ரூ. 93,28,000) கட்டணத்திற்காக at the rate of Average Weighted Prime Lending Rate + வருடாந்தம் நூற்றுக்கு இரண்டு தசம் ஐந்து வீதம் (2.5%) (Floor rate of 12%) மேலும் பதினேழு கோடியே ஐம்பது இலட்சம் ரூபா (ரூ. 17,50,00,000.00) கட்டணத்திற்காக at the rate of Average Weighted Prime Lending Rate + வருடாந்தம் நூற்றுக்கு மூன்று தசம் ஐந்து வீதம் (3.5%) மேலும் பன்னிரெண்டு கோடியே முப்பத்தொரு இலட்சத்து இருபத்தையாயிரம் ரூபா (ரூ. 12,31,25,000) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றிற்கு எட்டு தசம் ஏழு ஐந்து வீதம் (8.75%) வருமதியாகவுள்ள வட்டியுடன், விளம்பரச் செலவுகள், ஏனைய செலவுகள், ஏதேனும் கட்டணங்கள் செலுத்தப்பட்டிருப்பின் அவற்றையும் கழித்து அறவிட்டுக் கொள்வதற்கு கூறப்பட்ட ஈட்டு முறி இலக்கங்கள் 2814, 782, 2816, 2812 மற்றும் 2205 மீது பிணையாக வைக்கப்பட்டுள்ள சொத்துக்கள், நிலமனைகளை கொழும்பு உத்தரவுபெற்ற ஏலதாரர்களான பீ. கே. ஈ. சேனாபத்தி என்பவர்கள் மூலமாக அட்டவணை இல. 01 இன் கீழ் அமைந்த சொத்துக்கள் நிலமனைகள் 2023.10.26 ஆந் திகதி மு.ப.11.00 மணிமுதல், அட்டவணை இல. 2 மற்றும் 4 இன் கீழ் அமைந்த சொத்துக்கள் நிலைமனைகளை 2023.10.26 ஆந் திகதி பி.ப. 1.30 மற்றும் பி.ப. 1.45 மணி முதல் , இல. 3 இன் கீழ் அமைந்த சொத்துக்கள் நிலமனைகள் 2023.10.26 ஆந் திகதி பி.ப. 12.30 மணி முதல் அதே இடத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் என இத்தால் தீர்மானிக்கின்றது.

**அட்டவணை**

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், ஹோவாகம் கோரலே, பல்லே பத்துவின் கடுவெல மாநகர சபை எல்லைகளுக்குள் மற்றும் பிரதேச செயலாளர் பிரிவின் இல. 447/A, ஷாந்தாலோக்ககம கிராம அலுவலர் பிரிவின் ஒருவல கிராமத்தில் அமைந்த 04 ஆவது ஒழுங்கை, வரிமதிப்பீட்டு இல. 23 ஐ ஏற்ற "வனபொத்துமுக்கலான, ஒருவல எஸ்ட்டேட், தெனகாஹாதெனிய மற்றும் மாஹாகெளேமுக்கலான" என்றழைக்கப்படும்காணிக்குஉத்தரவுபெற்றநிலஅளவையாளர் எஸ். பீ. ஆர். பத்திராஜ என்பவரால் தயாரிக்கப்பட்ட 2014, மே 08 ஆந் திகதியிடப்பட்ட இல. 5949 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் B எனக் குறிடப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன - வடக்கு : சீமேந்து வடிகால் (இல. 2535 எனும் வரைபடத்தில் லொட் 391 A) ; கிழக்கு : 10 அடிகள் அகல வீதி (இல. 2535 எனும் வரைபடத்தில் லொட் இல. 391B) ; தெற்கு : எச். எம். ஆர். சீ. எஸ். ராஜகருணா என்பவர் உரிமம் கோரும் இல. 5848 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட காணி ; மற்றும் மேற்கு : இல. 2535 எனும் வரைபடத்தில் லொட் 364 ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் ஏழு பேர்ச்சுகள் (0ஏ. 0றூ. 7பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும் நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் மற்றும் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் இல. 5949 எனும் வரைபடத்திற்கு அமைவானதாகும்.

கூறப்பட்ட லொட் B கீழே நேர்த்தியாக விபரிக்கப்பட்ட காணியின் மீள் அளவீடாகும் :

மேற்கூறப்பட்ட ஒருவல கிராமத்தில் அமைந்த "வனபொத்து முக்கலான, ஒருவல எஸ்ட்டேட், தெனகாஹாதெனிய மற்றும் மாஹாகெள்ளேமுக்கலான" என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எஸ். பீ. ஆர். பத்திராஜ என்பவரால் தயாரிக்கப்பட்ட 1999, யூன் 22 ஆந் திகதியிடப்பட்ட இல. 2535 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் 380 எனக் குறிடப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன- வடக்கு :

லொட் 391 A ; கிழக்கு : லொட் இல. 391B ; தெற்கு : லொட் 379 மற்றும் மேற்கு : லொட் 364 ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் ஏழு பேர்ச்சுகள் (0ஏ. 0றூ. 7பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும் நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் மற்றும் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் இல. 2535 எனும் வரைபடத்திற்கு அமைவானதாக ஹோமாகமை காணிப் பதிவகத்தில் பரிமாணம்/பக்கம் B732/03 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இல. 2535 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட லொட் இலக்கங்கள் 391B, 297, 232 மற்றும் 233 இன் மீதும் அதன் ஊடாகவும் அதன் கீழும் பிரவேசிப்பதற்கான மார்க்க உரிமைகளுடனானது.

(இல. 2816 எனும் ஈட்டுமுறியின் மீது பிணையாக அடகு வைக்கப்பட்டுள்ளது.)

2. மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், சல்பிட்டி கோரளே பல்லேபத்துவின் கொழும்பு மாநகர சபை எல்லைகளுக்குள், திம்பிரிகஸ்யாய பிரதேச செயலாளர் பிரிவின் கொள்ளுப்பிட்டி கிராம அலுவலர் பிரிவின் வோட் இல. 37, கொள்ளுப்பிட்டி வீதியில் அமைந்த “த மொனாக் எட் கிரஸ்கெட் சிட்டி” என்றழைக்கப்படும் அறியப்படும் கட்டிடத்தின் காணிக்கு கொழும்பு 3 (காலி வீதி), கொள்ளுப்பிட்டி வீதி, வரிமதிப்பீட்டு இல. 89/ 15/ 2 ஐ ஏற்ற காணிக்கு உத்தரவுபெற்ற நில அளவையாளர் பீ. பி. தொடம்வல என்பவரால் தயாரிக்கப்பட்ட 2008, பெப்புருவரி 26 ஆந் திகதியிடப்பட்ட இல. 6562 எனும் அடுக்குமனை குடியிருப்பு வரைபடத்தில் (Condominium Plan) காட்டப்பட்ட இல. Y/F15/U7 குடியிருப்பு காண்டோமீனியம் (Parcel) வீட்டின் எல்லைகளாவன- வடக்கு : பார்சல் துண்டு இல. CE F 15/10 மற்றும் CE F 5/16 ; கிழக்கு : பார்சல் துண்டு இல. CE F 5/16 மற்றும் Y/F5/U6 (face above) ; தெற்கு : பார்சல் துண்டு இல. Y/F 5/U6 (face above), Y/F5/U7 (face above) மற்றும் Y/F15/U8 ; மேற்கு : பார்சல் துண்டு இல. Y/F15/U8 மற்றும் CE F 15/10. உச்சி ZENITH : பார்சல் துண்டு இல. Y/F16/U6. அடிமட்டம் (இட்டம் NADIR) : பார்சல் துண்டு இல. Y/F14/U7.

நூற்றிருபத்தாறு சதுர மீற்றர்களைக் கொண்ட நிலப்பரப்பு (126 Sq.m).

கூறப்பட்ட அடுக்குமனை குடியிருப்பு (Condominium) துண்டின் உறுதி இல. Con E 49/64 இன்கீழ் கொழும்பு காணிகள் பதிவு அலுவலகத்தில் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

இப்பார்சல் துண்டிற்கான மிக அண்மைய பிரவேச மார்க்கம் CE F15/10 ஆகும்.

இல. Y/F15/U7 எனும் இவ் அடுக்குமனை குடியிருப்பு (Condominium) பார்சல் துண்டு இரண்டு படுக்கையறைகள், வரவேற்பறை மற்றும் அறையும் பேண்டறி (சமையலறை), இரண்டு மலசலகூடங்கள் மற்றும் களஞ்சியவறையும் மற்றும் பேல்கனி உரித்தானவையாகும்.

கூறப்பட்ட இல. 6562 எனும் அடுக்குமனை குடியிருப்பு (Condominium) பார்சல் துண்டு இல. A 116 (வாகன தரிப்பிடம்) இப்பார்சல் துண்டிற்காக வேறாக்கப்பட்டுள்ளதுடன் அது கீழ்க்கண்டவாறாகும் :

வடக்கு : துண்டு இல. A115 ; கிழக்கு : CE F 2/26 ; தெற்கு : CE F 2/26 ; மேற்கு : CE F 2/26. உச்சி ZENITH : இப்பார்சல் துண்டின் முகப்பு. அடிமட்டம் (இட்டம் NADIR) : பார்சல் துண்டின் கொன்கிறீட் நிலம். பன்னிரண்டு சதுர மீற்றர்களைக் கொண்ட நிலப்பரப்பு (12 Sq.m).

இவ் அடுக்குமனை குடியிருப்பு (Condominium) துண்டுடன் தொடர்புடைய பொது வசதிகளைப் பாவிப்பதற்கான உரிமைகளுடனானது.

இல. Y/F14/U7 எனும் இவ் அடுக்குமனை குடியிருப்பு (Condominium) பார்சல் துண்டின் பொது வசதிகள் மற்றும் பொதுக் கூறுகளின் A116 அடுக்குமனை குடியிருப்பு (Condominium) பார்சல் சொத்திற்குரிய பிரிக்கப்படாத பகுதியின் பெறுமதி 32 ஆகும்.

உத்தரவுபெற்ற நில அளவையாளர் ஹியூ ஆர். சமரசிங்ஹ என்பவரால் தயாரிக்கப்பட்ட 1995, நவெம்பர் 16 ஆந் திகதியிடப்பட்ட இல. 2289 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட லொட் 07 (வீதி ஒதுக்கம்) இன் ஊடாகவும் அதன் மீதும் பிரவேசிப்பதற்கான மார்க்க உரிமைகளுடனானது.

(இல. 2814 எனும் ஈட்டுமுறியின் மீது பிணையாக அடகு வைக்கப்பட்டுள்ளது.)

3. மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், சல்பிட்டி கோரளேபல்லேபத்துவின் ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே மாநகர சபை எல்லைகளுக்குள் மற்றும் பிரதேச செயலாளர் பிரிவின் நாவல கிழக்கு இல. 520B, ஷாந்தாலோக்ககம கிராம அலுவலர் பிரிவின் நாவலையில் அமைந்த, பழைய வீதி, 1 ஆவது ஒழுங்கை, வரிமதிப்பீட்டு இல. 21B ஐ ஏற்ற “லியனகாஹா குருந்துவத்த” என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நில அளவையாளர் கே. வீ. எம். டபிள்யூ. சமரநாயக்க என்பவரால் தயாரிக்கப்பட்ட 2010, செத்தெம்பர் 21 ஆந் திகதியிடப்பட்ட இல. 3878A எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் C எனக் குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன- வடக்கு : இல. 4703 எனும் வரைபடத்தில் லொட் 1A ; கிழக்கு : தனியார் வீதி ; தெற்கு : 1 ஆவது ஒழுங்கை ; மற்றும் மேற்கு : லொட் B ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் இருபத்தொரு பேர்ச் (0ஏ. 0றூ. 21பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும், நிலம், மரங்கள், பயிர்கள், கட்டிடங்களுடன் மற்றும் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் இல. 3878 A எனும் வரைபடத்திற்கு அமைவானதாக தெல்கந்தை - நுகேகொடை காணிப்பதிவகத்தில் பரிமாணம்/பக்கம் A 161/77 இல் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

உத்தரவுபெற்ற நில அளவையாளர் எம். எஸ். ரீ. பீ. சேனாதீர என்பவரால் தயாரிக்கப்பட்ட 1973, செத்தெம்பர் 04 ஆந் திகதியிடப்பட்ட இல. 669 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட லொட் A இன் ஊடாகவும் அதன் மீதும் பிரவேசிப்பதற்கான மார்க்க உரிமைகளுடனானது.

(இலக்கங்கள் 2205 மற்றும் 2812 எனும் ஈட்டுமுறிகளின் மீது பிணையாக அடகு வைக்கப்பட்டுள்ளது.)

4. மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், சல்பிட்டி கோரளே பல்லேபத்துவின் கொழும்பு மாநகர சபை எல்லைகளுக்குள், திம்பிரிகஸ்யாய பிரதேச செயலாளர் பிரிவின் கொள்ளுப்பிட்டி கிராம அலுவலர் பிரிவின் வோட் இல. 37, கொள்ளுப்பிட்டி வீதியில் அமைந்த, "த மொனாக் எட் கிரஸ்கெட் சிட்டி" என்றழைக்கப்படும் அறியப்படும் கட்டிடத்தின் காணிக்கு கொழும்பு 3 (காலி வீதி), கொள்ளுப்பிட்டி வீதி, வரிமதிப்பீட்டு இல. 89/ 19/ 8 ஐ ஏற்ற காணிக்கு உத்தரவுபெற்ற நில அளவையாளர் பீ. பி. தொடம்வல என்பவரால் தயாரிக்கப்பட்ட 2008, பெப்புருவரி 26 ஆந் திகதியிடப்பட்ட இல. 6562 எனும் அடுக்குமனை குடியிருப்பு வரைபடத்தில் (Condominium Plan) காட்டப்பட்ட பத்தொன்பதாம் மாடியின் (19 ஆவது) இல. Y/F19/U4 குடியிருப்பு காண்டோமீனியம் (Parcel) வீட்டின் எல்லைகளாவன- வடக்கு : பார்சல் துண்டு இல. YF 5/U3 (face above) மற்றும் இல. YF 5/U4 (face above) மற்றும் YF 19/U5; கிழக்கு : பார்சல் துண்டு இல. YF 19/U5 மற்றும் இல. CE F 19/10 ; தெற்கு : பார்சல் துண்டு இல. CE F 19/10 மற்றும் Parcel Y/F19/U3 ; மேற்கு : பார்சல் துண்டு இல. Y/F19/U3 மற்றும் Y F5/U3 (face above). உச்சி (ZENITH) : பார்சல் துண்டு இல. Y/F20/U3. அடிமட்டம் (இட்டம் NADIR) பார்சல் துண்டு இல. Y/F18/U4. நூற்று இருபத்து நான்கு சதுர மீற்றர்களைக் கொண்ட நிலப்பரப்பு (124 Sq.m).

கூறப்பட்ட அடுக்குமனை குடியிருப்பு (Condominium) துண்டின் உறுதி இல. Con E 11/74 இன்கீழ் கொழும்பு காணிகள் பதிவு அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

அடுக்குமனை குடியிருப்பு (Condominium) பார்சல் சொத்திற்குரிய பிரிக்கப்படாத பகுதியின் பெறுமதி 33 ஆகும்.

இப் பார்சல் துண்டிற்கான மிக அண்மைய பிரவேச மார்க்கம் CE/F19/10 ஆகும்.

பொதுக் கூறுகள் பார்சல் துண்டு இல. A 141 (வாகன தரிப்பிடம்) இப்பார்சல் துண்டிற்காக வேறாக்கப்பட்டுள்ளதுடன் அது கீழ்க்கண்டவாறாகும்- வடக்கு : Y/B, F0, F1/U1/A5 ; கிழக்கு : பார்சல் துண்டு இல. A 140 ; தெற்கு : CE F 0/1 ; மேற்கு: CE F 0/1. உச்சி (ZENITH) : இப்பார்சல் துண்டின் உச்சியின் முகப்பு. அடிமட்டம் (இட்டம் NADIR) பார்சல் துண்டின் கொன்கிறீட் நிலம். நூற்று இருபத்தைந்து சதுர மீற்றர்களைக் கொண்ட நிலப்பரப்பு (125 Sq.m).

கூறப்பட்ட அடுக்குமனை குடியிருப்பு (Condominium) துண்டின் உறுதி இல. Con A 168/204 இன்கீழ் கொழும்பு காணிகள் பதிவு அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

உத்தரவுபெற்ற நில அளவையாளர் ஹியூ ஆர். சமரசிங்ஹ என்பவரால் தயாரிக்கப்பட்ட 1995, நவெம்பர் 16 ஆந் திகதியிடப்பட்ட இல. 2289 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட லொட் 07 (வீதி ஒதுக்கம்) இன் ஊடாகவும் அதன் மீதும் பிரவேசிப்பதற்கான மார்க்க உரிமைகளுடனானது.

(இலக்கங்கள் 782 எனும் ஈட்டுமுறியின் மீது பிணையாக அடகு வைக்கப்பட்டுள்ளது.)

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கம்பனிச் செயலாளர்.

09-281

---

## இலங்கை வங்கி

1968 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1974ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறான இலங்கை வங்கிக் கட்டளைச் சட்டத்தின் (397 ஆம் அத்தியாயம்) 22ஆம் பிரிவின் கீழ் வெளியிடப்படும் ஏல விற்பனை அறிவித்தல்

1. கடன் தொடர்பு இல: 88530606
2.நிரந்தர மேலதிகப் பற்று இல.:5683096

இஹலவத்தை, முகலான, ஹங்கம எனும் முகவரியைச் சேர்ந்த திரு. ஜெயசிங்ஹ ஆராச்சிகே ரத்னசிறி என்பவரின் ஈடுவைக்கப்பட்ட ஆதனத்தின் விற்பனை.

இலங்கை வங்கிக் கட்டளைச் சட்டம் 19 ஆம் பிரிவின் கீழ் இலங்கை வங்கிப் பணிப்பாளர்கள் சபை எடுத்த தீர்மானத்துக்கமைய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2023.07.21ஆந் திகதிய 2342ஆம் இலக்க வர்த்தமானியிலும் 2023.07.26 ஆந் திகதி "தினகரன்", "தினமின" மற்றும் "டெய்லிநியுஸ்" ஆகிய பத்திரிகைகளிலும் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கமைய நிலுவை முதலையும் விற்பனைத் திகதி வரை வருமதியாகவுள்ள வட்டியையும் மேற்குறிப்பிட்ட கட்டளைச் சட்டத்தின் பிரிவு 26 இன் கீழ் அறவிட வேண்டிய செலவு மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இங்கு கீழ் அட்டவணையில் விபரித்த சொத்தையும் நிலமனையையும் இல.50/3, விஹார மாவத்தை, கொலன்னாவ எனும் முகவரி யைச் சேர்ந்த T&H ஒக்ஷன்ஸ் ஏல நிறுவனத்தின் ஏலதாரர் துசித்த கருணாரத்ன அவர்கள் 2023.10.20ஆந் திகதி பி.ப.12.30 மணிக்கு அதே இடத்தில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்வாரென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

### மேற்குறிப்பிடப்பட்ட அட்டவணை

1. தென் மாகாணம், அம்பாந்தோட்டை மாவட்டம், கிறுவா பற்று கிழக்கு, அம்பலாந்தொட்ட பிரதேச சபை எல்லைகளுள் அம்பலாந்தொட்ட பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட இலக்கம் 181 முலான கிராம அலுவலர் பிரிவில் முலானவில்

"லுனுவேரனியகஹஹேன" என்றழைக்கப்படும் காணியின் உரிமம் பெற்ற நில அளவையாளர் எச். எச். தர்மதாஸ தயாரித்த 2017.08.16 ஆந் திகதியிட்ட 6182 ஆம் இலக்க வரைபடத்தில் விபரிக்கப்பட்ட பிரிக்கப்பட்டு எல்லை நிர்ணயிக்கப்பட்ட 36B என அடையாளமிடப்பட்ட காணித்துண்டு - வடக்கு: FVP 453 ஆம் இலக்க வரைபடத்தில் 37 ஆம் இலக்க காணித்துண்டையும்; கிழக்கு: FVP 453 ஆம் இலக்க வரைபடத்தில் 35 ஆம் இலக்க காணித்துண்டையும் ; தெற்கு: 6182 ஆம் இலக்க வரைபடத்தில் 36C ஆம் இலக்க காணித்துண்டையும்; மேற்கு: 6182 ஆம் இலக்க வரைபடத்தில் 36A ஆம் இலக்க காணித்துண்டையும் எல்லைகளாகக் கொண்டுள்ளது. இக்காணித்துண்டானது அங்குள்ள மண், மரங்கள், தோட்டங்கள், கட்டடங்கள் மற்றும் அனைத்துடனும் ஒரு றூட் மற்றும் பதினேழு தசம் மூன்று பேர்ச் (00ஏ. 01றூ. 17.3பே.) பரப்பளவுடனும் LDO F 36/26 எனும் இலக்கத்தின் கீழ் அம்பாந்தோட்டை காணிப்பதிவகத்தில் பதியப்பட்டுள்ளது.

ஒதுக்கங்கள்

1. இக்காணியில் அல்லது அதற்கு மேலுள்ள கனிமங்கள் (இவ்வனுமதியில் விலைமதிப்பற்ற கல் எனக் குறிப்பிடப் படும்) அனைத்ினதும் உரிமையும் அத்தகையவற்றை தோண்டுவதற்கும்,தேடுவதற்கும்,அங்குபணியாற்றுவதற்கும் மற்றும் எடுத்துச் செல்வதற்குமான உரிமையும் அரசுக்கே உரியதாகும்.

2. காணி உரிமையாளருக்கு காணிமீதுள்ள உரிமையானது இவ்வனுமதியில் திகதியில் தற்போதுள்ள எந்தவொரு வழியுரிமைக்கும் அல்லது பிற சேவக உரிமைக்கும் உட்பட்டதாகும்.

நிபந்தனைகள்:

1. 20 பேர்ச் மேட்டுநிலம்; ஹெக்டேயார்/ஏக்கர் நீர்ப்பாசன நிலம் எனப்படும் இங்கு குறிப்பிடப்பட்டுள்ள துணைப்பிரிவின் அலகினை விட பரப்பளவில் குறைவான இக்காணியின் பிரிக்கப்பட்ட பங்கொன்றினை உரிமையாளர் விற்பனை செய்யக்கூடாது.
2. உரிமையாளர் இங்கு குறிப்பிடப்பட்டுள்ள குறைந்தபட்சப் பகுதியைவிடக் குறைவான பங்கின் பிரிக்கப்படாத 1/2 பங்கினை விற்பனை செய்யக்கூடாது.
அதாவது:-
3. நிபந்தனை 1 இல் குறிப்பிடப்பட்டுள்ள துணைப்பிரிவின் அலகினை விட பரப்பளவில் குறைவான இக்காணியின் பிரிக்கப்பட்ட பங்கொன்றிற்கு எந்தவொரு நபரும் உரிமையாளராகக் கூடாது.
4. நிபந்தனை 2 இல் குறிப்பிடப்பட்டுள்ள இக்காணியின் குறைந்தபட்சப் பகுதியை விடக் குறைவான பிரிக்கப்படாத பங்கொன்றிற்கு எந்தவொரு நபரும் உரிமையாளராகக் கூடாது.
5. இக்காணியோ அல்லது அதன் எந்தவொரு பகுதியோ நீர்ப்பாய்ச்சத்தகு பிரதேசமாகவிருப்பின் அல்லது ஏற்கனவே கட்டுமானத்தின்போது கட்டப்பட்ட அல்லது இனிமேல் கட்டப்படவிருக்கும் நீர்ப்பாசனப் பணியின்போது நீர்ப்பாசனத்திற்கு உட்படுமாயின், உரிமையாளர் நீர்ப் பாசனப் பகுதியைப் பொருத்து நீர்ப்பாசனக் கட்டளை (அத்தியாயம் 453) ஏற்பாடுகளுக்கும் அதன் கீழ் உருவாக்கப்பட்ட விதிகளுக்கும் இணங்க வேண்டும்.
6. அரச முகவரின் எழுத்துபூர்வமான அனுமதியையும் உரிய அதிகார சபையிடம் உரிமத்தினையும் பெற்றாலன்றி, உரிமையாளர் இக்காணியில் அல்லது அதன் உள்ளிருக்கும் கனிமங்களைத் தோண்டவோ, தொடவோ, எடுக்கவோ, உபயோகப்படுத்தவோ, விற்கவோ இல்லையெனில் அப்புறப்படுத்தவோ கூடாது.
7. பிரதேச செயலாளரின் எழுத்துமூலமான முன் அனுமதியின்றி காணியினது அல்லது அதன் எந்தவொரு பகுதியினதும் இயல்பினை மாற்றக்கூடாது.

இலங்கை வங்கிப் பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

ஜி. ஜி. ட. ரண்திம,
முகாமையாளர்,

இலங்கை வங்கி,
அங்குனுகொலபெலஸ்ஸ.

ஏல விலை கூறுவோர் 047- 2229120 என்ற தொலைபேசி இலக்கம் ஊடாக அங்குனுகொலபெலஸ்ஸ கிளையின் முகாமையாளரைத் தொடர்புகொண்டு உரிமைப் பத்திரங்கள் மற்றும் மேற்கூறிய சொத்துக்கள் தொடர்பான பிற ஆவணங்களை பரிசோதிக்கலாம்.

09-248

---

## இலங்கை வங்கி

1968 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1974ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறான இலங்கை வங்கிக் கட்டளைச் சட்டத்தின் (397 ஆம் அத்தியாயம்) 22ஆம் பிரிவின் கீழ் வெளியிடப்படும் ஏல விற்பனை அறிவித்தல்

1. கடன் தொடர்பு இல: 88488765

இஹலவத்தை, முகலான, ஹங்கம எனும் முகவரியைச் சேர்ந்த திரு. ஜெயசிங்ஹ ஆராச்சிகே ரத்ணசிறி என்பவரின் ஈடுவைத்த ஆதனத்தின் விற்பனை.

இலங்கை வங்கிக் கட்டளைச் சட்டம் 19 ஆம் பிரிவின் கீழ் இலங்கை வங்கிப் பணிப்பாளர்கள் சபை எடுத்த தீர்மானத்துக்கமைய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2023.06.16ஆந் திகதிய 2337ஆம் இலக்க வர்த்தமானியிலும் 2023.06.23 ஆந்

திகதி "தினகரன்" , "தினமின" மற்றும் "டெய்லி நியுஸ்" ஆகிய பத்திரிகைகளிலும் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கமைய நிலுவை முதலையும் விற்பனைத் திகதி வரை வருமதியாகவுள்ள வட்டியையும் மேற்குறிப்பிட்ட கட்டளைச் சட்டத்தின் பிரிவு 26 இன் கீழ் அறவிட வேண்டிய செலவு மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இங்கு கீழ் அட்டவணையில் விபரித்த சொத்தையும் நிலமனையையும் இல.50/3, விஹார மாவத்தை, கொலன்னாவ எனும் முகவரி யைச் சேர்ந்த T&H ஒக்ஷன்ஸ் ஏல நிறுவனத்தின் ஏலதாரர் துசித்த கருணாரத்ன அவர்கள் 2023.10.20ஆந் திகதி மு.ப.11.30 மணிக்கு அதே இடத்தில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்வாரென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

#### மேற்குறிப்பிடப்பட்ட அட்டவணை

6702 ஆம் இலக்க வரைபடத்தின்படி பட்டமுலு லந்த என அறியப்படும் பட்டமலு லந்த (TF 313300) என்ற காணியின் உரிமம் பெற்ற நில அளவையாளர் எல். கே. குணசேகர தயாரித்த 2018.02.13 ஆந் திகதியிட்ட 6702 ஆம் இலக்க வரைபடத்தில் விபரிக்கப்பட்டுள்ள பிரிக்கப்பட்டதும் எல்லை வரையறுக்கப்பட்டதுமான காணித்துண்டு A என அடையாளமிடப்பட்ட காணியானது தென் மாகாணம், அம்பாந்தோட்டை மாவட்டம், கிறுவா பற்று கிழக்கு, அம்பலந்தோட்டை பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட அம்பலந்தோட்டை பிரதேச சபை எல்லைகளுள் இஹலகம கிராம அலுவலர் பிரிவில் உடுகனுகெட்டியவில் அமைந்துள்ளது. இக்காணியானது- வடக்கு 2005/ 1370 ஆம் இலக்க வரைபடத்தில் 1A என்ற காணித்துண்டையும்; கிழக்கு: அதே காணியின் எஞ்சிய பகுதியையும்; தெற்கு: 2005/ 1370 ஆம் இலக்க வரைபடத்தில் 2 என்ற காணித்துண்டையும்; மேற்கு: ஹுங்கமவிலிருந்து மித்தெனியவிற்கான பிரதான வீதியையும் எல்லைகளாகக் கொண்டு இக்காணித்துண்டானது மேற்குறிப்பிட்ட 6702 ஆம் இலக்க வரைபடத்தின்படி அங்குள்ள மண், மரங்கள், தோட்டங்கள், கட்டடங்கள் மற்றும் அனைத்தையும் உள்ளடக்கி இருபது பேர்ச் (00ஏ. 00றூ. 20பே.) பரப்பளவையும் கொண்டுள்ளது.

மேற்குறிப்பிட்ட காணித்துண்டு 1Aஆனது கீழ் விவரிக்கப்பட்ட காணியின் உரிமம் பெற்ற நில அளவையாளர் ஐ. கொடம்பகே தயாரித்த 2005.09.22 ஆந் திகதிய 2005/ 1370 ஆம் இலக்க வரைபடத்திலுள்ள தற்போதைய எல்லைகளுடனான 1B என்ற காணித்துண்டினது மீளளவையாகும்.

பட்டமலு லந்த (TF 313300) என்ற காணியின் உரிமம் பெற்ற நில அளவையாளர் ஐ. கொடம்பகே தயாரித்த 2005.09.22 ஆந் திகதிய 2005/1370 ஆம் இலக்க வரைபடத்தில் பிரிக்கப்பட்டதும் எல்லை வரையறுக்கப்பட்டதுமான 1B என அடையாளமிடப்படட காணித்துண்டு மேற்குறிப்பிட்டபடி உடுகனுகெட்டியவில் அமைந்துள்ளது. இக்காணித்துண்டு - 1B வடக்கு: 2005/1370 ஆம் இலக்க வரைபடத்தில் 1A என்ற காணித்துண்டையும்; கிழக்கு: அதே காணியின் எஞ்சிய பகுதியையும்; தெற்கு: 2005/ 1370 ஆம் இலக்க வரைபடத்தில் 2 என்ற காணித்துண்டையும்; மேற்கு: ஹுங்கமவிலிருந்து மித்தெனியவிற்கான பிரதான வீதியையும் எல்லைகளாகக் கொண்டு மேற்குறிப்பிட்ட 2005/ 1370 ஆம் இலக்க வரைபடத்தின்படி அங்குள்ள மண், மரங்கள், தோட்டங்கள், கட்டடங்கள் மற்றும் அனைத்தையும் உள்ளடக்கி இருபது பேர்ச் (00ஏ. 00றூ. 20பே.) பரப்பளவையும் அம்பாந்தோட்டை காணிப்பதிவகத்தில் 69/ 44 என்ற இலக்கத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இலங்கை வங்கிப் பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

ஜி. ஜி. டீ. ரண்திம,
முகாமையாளர்,

இலங்கை வங்கி,
அங்குனுகொலபெலஸ்ஸ.

ஏல விலை கூறுவோர் 047- 2229120 என்ற தொலைபேசி இலக்கம் ஊடாக அங்குனுகொலபெலஸ்ஸ கிளையின் முகாமையாளரைத் தொடர்புகொண்டு உரிமைப் பத்திரங்கள் மற்றும் மேற்கூறிய சொத்துக்கள் தொடர்பான பிற ஆவணங்களை பரிசோதிக்கலாம்.

09-250

---

### இலங்கை வங்கி

1968 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1974ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறான இலங்கை வங்கிக் கட்டளைச் சட்டத்தின் (397 ஆம் அத்தியாயம்) 22ஆம் பிரிவின் கீழ் வெளியிடப்படும் ஏல விற்பனை அறிவித்தல்

கடன் தொடர்பு இலக்கங்கள்: 78427689, 82130023,83179218, 83986619
மேலதிகப் பற்று இல.:73517789

இல.89, அம்பாந்தோட்டை வீதி, வலவ்வ, அம்பலாந்தோட்டை என்ற முகவரியைச் சேர்ந்த திரு. இமதுவ ஹேவகே அஜித் என்பவரின் ஈடுவைக்கப்பட்ட ஆதனத்தின் விற்பனை.

இலங்கை வங்கிக் கட்டளைச் சட்டம் 19 ஆம் பிரிவின் கீழ் இலங்கை வங்கிப் பணிப்பாளர்கள் சபை எடுத்த தீர்மானத்துக்கமைய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2019, நவெம்பர் 15 ஆந் திகதிய 2150 ஆம் இலக்க வர்த்தமானியிலும் 2019, நவெம்பர் 01 ஆந் திகதி "தினகரன்", "தினமின" மற்றும் "டெய்லி நியுஸ்" ஆகிய பத்திரிகைகளிலும் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கமைய நிலுவை முதலையும் விற்பனைத் திகதி வரை வருமதியாகவுள்ள வட்டியையும் மேற்குறிப்பிட்ட கட்டளைச் சட்டத்தின் 26 ஆம் பிரிவின் கீழ் அறவிட வேண்டிய செலவு மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இங்கு கீழ் அட்டவணையில் விபரித்த சொத்தையும் நிலமனையையும் இல.50/3, விஹார மாவத்தை, கொலன்னாவ எனும் முகவரியைச் சேர்ந்த T&H ஒக்ஷன்ஸ் ஏல நிறுவனத்தின் ஏலதாரர் திரு. எம்.எச்.ரி.கருணாரத்ன அவர்கள் 2023, ஒற்றோபர் 27ஆந் திகதி மு.ப.11.30 மணிக்கு அதே இடத்தில்

வைத்து பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்வாரென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

### மேற்குறிப்பிடப்பட்ட அட்டவணை

ஒடேகும்புர, மலித்தங்கஹகும்புர, மலித்தங்கஹவத்த என அறியப்படும் டிங்கிரி எலபெத்த என்ற காணியின் 1016 ஆம் இலக்க வரைபடத்தில் ஒன்றிணைக்கப்பட்ட காணித்துண்டு 1 மற்றும் 1040 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டு 1A என்பவற்றின் உரிமம் பெற்ற நில அளவையாளர் எச். எச். தர்மதாச தயாரித்த 2013, ஏப்பிறல் 10 ஆந் திகதியிடப்பட்ட 3434 ஆம் இலக்க வரைபடத்தில் விபரிக்கப்பட்டுள்ள துண்டு A என அடையாளமிட்ட பிரிக்கப்பட்டதும் எல்லை நிர்ணயிக்கப்பட்டதுமான காணித்துண்டு தென் மாகாணம், அம்பாந்தோட்டை மாவட்டம், அம்பாந்தோட்டை பிரதேச செயலாளர் பிரிவு மற்றும் பிரதேச சபை எல்லைகளுக்குள் வலவ்வ கிராம அலுவலர் பிரிவிலுள்ள மெதகம கிராமத்தில் அமைந்துள்ளது - வடக்கு : அதே காணியின் எஞ்சியுள்ள பகுதியையும் ; கிழக்கு : 1046 ஆம் இலக்க வரைபடத்திலுள்ள காணித்துண்டு 1B ஐயும் : தெற்கு : அம்பலாந்தோட்டை-அம்பாந்தோட்டை பிரதான வீதியையும்; மேற்கு : T. P. 135322 ஐயும் எல்லைகளாகக் கொண்டுள்ளதோடு முப்பத்தைந்து தசம் ஐந்து பேர்ச் (0ஏ.0றூ.35.5பே.) பரப்பளவுடைய காணியையும் அதனகத்துள்ள மண், மரங்கள், தாவரங்கள், கட்டிடங்கள் என அனைத்தையும் கொண்டுள்ளது. இது அம்பாந்தோட்டை காணிப்பதிவகத்தில் தொகுதி பக்கம் H 35/ 11 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

திரு. இமதுவ ஹேவகே அஜித் கிளையின் தொங்கற் கணக்குக்கு 2022.11.14 ஆந் திகதியன்று 1.0 மில்லியன் ரூபாயினை வைப்பிலிட்டுள்ளபடியால் 2022.11.14 ஆந் திகதியன்று நடாத்தப்படவிருந்த ஏல விற்பனை தற்காலிகமாக நிறுத்தப்பட்டது.

ஏல விலை கூறுவோர் மேற்குறித்த ஆனத்தின் உரிமைத்துவ உறுதியை அதனோடு இணைந்த ஆவணங்களையும் இலங்கை வங்கி அம்பலாந்தோட்டைக் கிளையின் முகாமையாளருடன் தொடர்புகொள்வதன் மூலம்பார்வையிடலாம்.தொடர்புகளுக்கு- 047- 2223180.

இலங்கை வங்கி பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

எச். எம்.சி.எஸ். குமார,
முகாமையாளர்.

இலங்கை வங்கி,
அம்பலாந்தோட்டை.

09- 251

### இலங்கை வங்கி

1968 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1974ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறான இலங்கை வங்கிக் கட்டளைச் சட்டத்தின் (397 ஆம் அத்தியாயம்) 22ஆம் பிரிவின் கீழ் வெளியிடப்படும் ஏல விற்பனை அறிவித்தல்

கடன் தொடர்பு இல.: 75900487/88312251/87687427

ஹாட்டியாதூவ வீதி, தெனிபிட்டிய எனும் முகவரியைச் சேர்ந்த திரு. ஹேவா வரவிட்டகே கமல் நந்தகுமார ஹேவா வரவிட்ட நிமல்வாச என்பவரின் ஈடுவைக்கப்பட்ட ஆதனத்தின் விற்பனை.

இலங்கை வங்கிக் கட்டளைச் சட்டம் 19 ஆம் பிரிவின் கீழ் இலங்கை வங்கிப் பணிப்பாளர்கள் சபை எடுத்த தீர்மானத்துக்கமைய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2023.07.21ஆந் திகதிய 2342ஆம் இலக்க வர்த்தமானியிலும் 2023.07.26ஆந் திகதி "தினகரன்" , "தினமின" மற்றும் "டெய்லிநியுஸ்" ஆகிய பத்திரிகைகளிலும் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கமைய நிலுவை முதலையும் விற்பனைத் திகதி வரை வருமதியாகவுள்ள வட்டியையும் மேற்குறிப்பிட்ட கட்டளைச் சட்டத்தின் பிரிவு 26 இன் கீழ் அறவிட வேண்டிய செலவு மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இங்கு கீழ் அட்டவணையில் விபரித்த சொத்தையும் நிலமனையையும் இல.50/3, விஹார மாவத்தை, கொலன்னாவ எனும் முகவரி யைச் சேர்ந்த T&H ஒக்ஷன்ஸ் ஏல நிறுவனத்தின் ஏலதாரர் திரு. எம்.எச்.ரி.கருணாரத்ன அவர்கள் 2023.10.24ஆந் திகதி மு.ப.10.30 மணிக்கு அதே இடத்தில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்வாரென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

### மேற்குறிப்பிட்ட அட்டவணை

"கனத்த எனப்படும் கனத்தே ஒவிட்ட" என்ற காணியின் உரிமம் பெற்ற நில அளவையாளர் எஸ். சமரசிங்ஹ தயாரித்த 2016.06.10 ஆந் திகதியிட்ட 3926 ஆம் இலக்க வரைபடத்தில் விவரிக்கப்பட்டுள்ள பிரிக்கப்பட்டதும் எல்லை வரையறுக்கப்பட்டதுமான காணித்துண்டு A ஆனது தென் மாகாணம், மாத்தறை மாவட்டம், வெலிகம கோரளையில், வெலிபிட்டிய பிரதேச செயலகப் பிரிவில், வெலிகம பிரதேச சபை எல்லைகளுள் இல. 391B, தெனிபிட்டிய மத்திய கிராம அலுவலர் பிரிவில், தெனிப்பிட்டிய எனும் கிராமத்தில் அமைந்துள்ளது. இக்காணித்துண்டானது - வடக்கு: ரணோகே பிமவினையும்;கிழக்கு:வீதியையும்;தெற்கு:குறித்த வரைபடத்தில் காணித்துண்டு B மற்றும் பிரதேச சபை வீதியையும்; மேற்கு: அதே காணியின் 6 ஆம் இலக்க காணித்துண்டையும் எல்லைகளாகக் கொண்டு முப்பத்தெட்டு தசம் எட்டு பேர்ச் (38.8பே.) பரப்பளவுடன் அக்காணியிலுள்ள மரங்கள்,

தோட்டங்கள் மற்றும் அனைத்தையும் உள்ளடக்கி N 128/ 83A எனும் இலக்கத்தின் கீழ் மாத்தறை காணிப்பதிவகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இலங்கை வங்கிப் பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

(திருமதி) கே. ஏ. பீ. நதீஷா,
முகாமையாளர்,

இலங்கை வங்கி,
வெலிகம.

ஏல விலை கூறுவோர் 041- 2250280 என்ற தொலைபேசி இலக்கம் ஊடாக வெலிகமை கிளையின் முகாமையாளரைத் தொடர்புகொண்டு உரிமைப் பத்திரங்கள் மற்றும் மேற்கூறிய சொத்துக்கள் தொடர்பான பிற ஆவணங்களை பரிசோதிக்கலாம்.

09-252

---

**இலங்கை வங்கி**

1968 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1974ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறான இலங்கை வங்கிக் கட்டளைச் சட்டத்தின் (397 ஆம் அத்தியாயம்) 22ஆம் பிரிவின் கீழ் வெளியிடப்படும் ஏல விற்பனை அறிவித்தல்

கடன் தொடர்பு இல.: 7268246

திசாநாயக்க முதியான்சேலாகே சுபானி மஹேஷா திசாநாயக்க ஈடுவைத்த ஆதனத்தின் விற்பனை. (ஏக உரிமையாளர் M/S ரவிந்து பாமஸி அன்ட் புக் ஷொப் - “சுசீறி”, நமால்வெவ, மிஹிந்தலை).

இலங்கை வங்கிக் கட்டளைச் சட்டம் 19 ஆம் பிரிவின் கீழ் இலங்கை வங்கிப் பணிப்பாளர்கள் சபை எடுத்த தீர்மானத்துக்கமைய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2023.08.18ஆந் திகதிய 2346ஆம் இலக்க வர்த்தமானியிலும் 2023.08.17ஆந் திகதி “தினகரன்” , “தினமின” மற்றும் “டெய்லி நியுஸ்” ஆகிய பத்திரிகைகளிலும் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கமைய நிலுவை முதலையும் விற்பனைத் திகதி வரை வருமதியாகவுள்ள வட்டியையும் மேற்குறிப்பிட்ட கட்டளைச் சட்டத்தின் பிரிவு 26 இன் கீழ் அறவிட வேண்டிய செலவு மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இங்கு கீழ் அட்டவணையில் விபரித்த சொத்தையும் நிலமனையையும் இல.50/3, விஹார மாவத்தை, கொலன்னாவ எனும் முகவரி யைச் சேர்ந்த T&H ஒக்ஷன்ஸ் ஏல நிறுவனத்தின் ஏலதாரர் திரு. எம்.எச்.ரி.கருணாரத்ன அவர்கள் 2023.10.25ஆந் திகதி மு.ப.11.30 மணிக்கு அதே இடத்தில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்வாரென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

**மேற்குறிப்பிட்ட முதலாவது அட்டவணை**

வட மத்திய மாகாணம் அநுராதபுர மாவட்டம் கனதர கோரளை, நுவரகம் பலாத்தயில் கண்டு துலானயில் மிகிந்தலை பிரதேச செயலாளர் பிரிவில் மற்றும் பிரதேச சபை எல்லைகளுள் நாமல்வெவ கிராம அலுவலர் பிரிவு இல. 579 இல் வேலன் குளம கிராமத்தில் அமைந்த “கீரியகஹ லந்த” என அழைக்கும் காணி உத்தரவுபெற்ற நில அளவையாளர் பி. பீ. இலங்கசிங்ஹ தயாரித்த 2008.03.16 ஆந் திகதியிட்ட வரைபடம் இல. 2008/An/109 இல் விபரித்த காணித்துண்டு 04 என அடையாளமிட்டு விபரித்த பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு- வடக்கு: F.V.P. 761 இல் காணித்துண்டு 22 உம்; கிழக்கு: மேற்கூறிய வரைபடத்தில் காணித்துண்டு 2 உம்; தெற்கு: மேற்கூறிய வரைபடத்தில் பாதை ஒதுக்கம் காணித்துண்டு 5உம்; மேற்கு: F.V.P. 761 இல் காணித்துண்டு 22 உம் எல்லைகளாகக் கொண்டு மேற்கூறிய வரைபடம் இல. 2008/An/109 இன் பிரகாரம் ஒரு றூட் முப்பத்து நான்கு பேர்ச் (00ஏ. 01றூ. 34பே.) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு அமைந்துள்ள மரங்கள் பயிர்கள் கட்டிடங்கள் மற்றும் சகலதும் ஆகும். இக்காணி அநுராதபுரம் மாவட்ட காணிப்பதிவகத்தில் E 01/ 165 இல் பதிவு செய்யப்பட்டது.

மேற்கூறிய காணி உத்தரவுபெற்ற நில அளவையாளர் என். பீ. ஏக்கநாயக்க தயாரித்த 2014.05.31 ஆந் திகதியிட்ட அண்மைய அளவை வரைபடம் இல. 1691 இன் பிரகாரம் பின்வருமாறு விபரிக்கப்பட்டுள்ளது.

மேற்கூறிய வேலன் குளம கிராமத்தில் அமைந்த “கீரியகஹ லந்த” என அழைக்கும் காணி உத்தரவுபெற்ற நில அளவையாளர் என். பீ. ஏக்கநாயக்க தயாரித்த 2014.05.31 ஆந் திகதியிட்ட வரைபடம் இல. 1691 இல் விபரித்த காணித்துண்டு 01 என அடையாளமிட்டு விபரித்த பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு - வடக்கு: F.V.P. 761 இல் காணித்துண்டு 22உம்; கிழக்கு: வரைபடம் இல. 2008/An/109 இல் காணித்துண்டு 2 உம்; தெற்கு: மேற்கூறிய வரைபடம் இல. 2008/An/109இல் காணித்துண்டு 5 உம்; மேற்கு: F.V.P. 761 இல் காணித்துண்டு 22 உம் எல்லைகளாகக் கொண்டு மேற்கூறிய வரைபடம் இல. 1691 இன் பிரகாரம் ஒரு றூட் முப்பத்து நான்கு பேர்ச் (00ஏ. 01றூ. 34பே.) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு அமைந்துள்ள மரங்கள் பயிர்கள் கட்டிடங்கள் மற்றும் சகலதும் ஆகும்.

**மேற்குறிப்பிட்ட இரண்டாவது அட்டவணை**

01. மேற்கூறிய வேலன் குளம கிராமத்தில் அமைந்த “கீரியகஹ லந்த” என அழைக்கும் காணி உத்தரவுபெற்ற நில அளவையாளர் பி. பீ. இலங்கசிங்ஹ தயாரித்த 2008.03.16 ஆந் திகதியிட்ட வரைபடம் இல. 2008/An/109 இல் விபரித்த காணித்துண்டு 08 (பாதைக்கான ஒதுக்கம்) என அடையாளமிட்டு விபரித்த பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு

08 - வடக்கு : மேற்கூறிய வரைபடத்தில் காணித்துண்டு 3 உம்; கிழக்கு: மேற்கூறிய வரைபடத்தில் காணித்துண்டு 1உம்; தெற்கு: F.V.P. 761 இல் காணித்துண்டு 22 I உம்; மேற்கு: மேற்கூறிய வரைபடத்தில் காணித்துண்டு 07 உம் எல்லைகளாகக் கொண்டு மேற்கூறிய வரைபடம் இல. 2008/An/109 இன் பிரகாரம் பதினொரு தசம் ஐந்து பேர்ச் (00ஏ. 00றூ. 11.5பே.) விஸ்தீரணமுடைய காணி ஆகும்.

2. மேற்கூறிய வேலன் குளம கிராமத்தில் அமைந்த "கீரியகஹ லந்த" என அழைக்கும் காணி மேற்கூறிய வரைபடம் இல. 2008/An/109 இல் விபரித்த காணித்துண்டு 03 (பாதைக்கான ஒதுக்கம்) என அடையாளமிட்டு விபரித்த பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு 03- வடக்கு: மேற்கூறிய வரைபடத்தில் காணித்துண்டு 2 உம்; கிழக்கு: F.V.P. 761 இல் காணித்துண்டு 22G உம்; தெற்கு: மேற்கூறிய வரைபடத்தில் காணித்துண்டு மற்றும் காணித்துண்டு 08 - பாதை ஒதுக்கமும்; மேற்கு: மேற்கூறிய வரைபடத்தில் காணித்துண்டு 05 பாதை ஒதுக்கம் எல்லைகளாகக் கொண்டு மேற்கூறிய வரைபடம் இல. 2008/An/109 இன் பிரகாரம் ஐந்து தசம் ஏழு பேர்ச் (00ஏ. 00றூ. 5.7பே.) விஸ்தீரணமுடைய காணி ஆகும்.

3. மேற்கூறிய வேலன் குளம கிராமத்தில் அமைந்த "கீரியகஹ லந்த" என அழைக்கும் காணி மேற்கூறிய வரைபடம் இல. 2008/An/109 இல் விபரித்த காணித்துண்டு 05 (பாதைக்கான ஒதுக்கம்) என அடையாளமிட்டு விபரித்த பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு 05- வடக்கு: மேற்கூறிய வரைபடத்தில் காணித்துண்டு 4 உம்; கிழக்கு: மேற்கூறிய வரைபடத்தில் காணித்துண்டு 03 - பாதை ஒதுக்கம்; தெற்கு: மேற்கூறிய வரைபடத்தில் காணித்துண்டு 06 மற்றும் 08 (பாதை ஒதுக்கம்): மேற்கு: F.V.P. 761 இல் காணித்துண்டு 22உம் எல்லைகளாகக் கொண்டு மேற்கூறிய வரைபடம் இல. 2008/An/109 இன் பிரகாரம் ஐந்து தசம் ஏழு பேர்ச் (00ஏ. 00றூ. 5.7பே.) விஸ்தீரணமுடைய காணி ஆகும்.

ஏல விலை கூறுவோர் தொலைபேசி இல. 025- 2258280 ஊடாக கலென்பிந்துனுவெவ கிளை முகாமையாளரைத் தொடர்பு கொள்வதன் மூலம் சம்பந்தப்பட்ட உரித்துரிமை உறுதிகளையும் ஏனைய ஆவணங்களையும் இலவசமாக பார்வையிடுவதற்கு வைக்கப்பட்டுள்ளது.

இலங்கை வங்கி பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

,

(திருமதி) எம். வை. டீ. மெடொன்சா,
முகாமையாளர்.

இலங்கை வங்கி,
கலென்பிந்துனுவெவ,
2023.09.02.

09-247

## இலங்கை கொமர்ஷல் வங்கி பீ.எல்.சீ.
## (நகர அலுவலகம்)

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் விடுக்கப்படும் விற்பனை அறிவித்தல்

1 ஆவதுஏலம்

உரிமம் பெற்ற நில அளவையாளர் எச்.எல்.குணசேகர அவர்களினால் தயாரிக்கப்பட்ட 1985, சனவரி 15 ஆந் திகதிய வரைபட இல. 1153 என பங்கீட்டு வரையறுக்கப்பட்ட காணியின் லொட் 3 எனக் குறிப்பிடப்பட்டதும் "கல்வலகனத்தை" என அழைக்கப்படும் காணி அதனுடன் கட்டடங்கள் , மரங்கள், தோட்டங்கள் மற்றும் அதன் மீது நிற்கும் மற்றவை எல்லாம் சேர்த்து, மேல் மாகாணத்தின், கொழும்பு மாவட்ட சல்பிட்டி கோரளையின் பள்ளே பற்று பிரதேசத்தில் ஹல்பிட்டவில் அமைந்துள்ள சொல்லப்பட்ட லொட் 03 காணித்துண்டானது- வடக்கில்: லொட் 02 இனாலும் ; கிழக்கில்: லொட் 05 இனாலும்; தெற்கில்: லொட் 4 இனாலும்; மேற்கில்: ஞானரத்ன மற்றும் ஏனையோரினாலும் உரிமை கோரப்படும் கொடபாரகஹலந்த இனாலும் எல்லைக்குட்படுத்தப்பட்டதுடன் காணியானது சொல்லப்பட்ட வரைபட இல. 1153 இன் படி ஒரு றூட் மற்றும் இருபத்தைந்து தசம் பூச்சியம் எட்டு பேர்ச் (0ஏ.0றூ.25.08பே.) விஸ்தீரணத்தினை கொண்டதுடன் தெல்கந்த - நுகேகொடை காணிப்பதிவகத்தில் தொகுதி/ பக்க எம் 1566 / 198 இல் பதியப்பட்டதுமாகும்.

மேலே கூறிய சட்ட உரிமையுடன் பின்வரும் வீதி ஒதுக்கீடும் கீழே விவரிக்கப்பட்டுள்ளது.

உரிமம் பெற்ற நில அளவையாளர் எச்.எல். குணசேகர அவர்களினால் தயாரிக்கப்பட்ட 1985, சனவரி 15 ஆந் திகதி வரைபட இல. 1153 ஆம் பங்கீட்டு வரையறுக்கப்பட்ட காணியின் லொட் 5 எனக் குறிப்பிடப்பட்ட காணி, மேல் மாகாணத்தில் கொழும்பு மாவட்ட சல்பிற்றி கோரளையின் பல்லே பற்று பிரதேசத்தில் ஹல்பிட்டவில் அமைந்துள்ள சொல்லப்பட்ட லொட் 5 காணித்துண்டானது- வடக்கில் : லொட் 02 இனாலும்; கிழக்கில்: டபிள்யூ. ஏ. வெஜினிஸ் மற்றும் ஏனையவர்களினால் உரிமை கோரப்படும் ஆதனத்தினாலும்; தெற்கில்: பாதையினாலும் ; மேற்கில்: லொட் 4 இனாலும் எல்லைப்படுத்தப்பட்டிருப்பதுடன் காணியானது சொல்லப்பட்ட வரைபட இல. 1153 படி இருபது பேர்ச் (0ஏ.0றூ.20பே.) விஸ்தீரணத்தினை கொண்டதுடன் தெல்கந்த - நுகோகொடை காணிப்பதிவகத்தில் தொகுதி/பக்க எம் 1566/200 இல் பதியப்பட்டதாகும்.

இலங்கை கொமர்ஷல் வங்கி பீஎல்சீ உடனான கொழும்பு பிரசித்த நொத்தாரிசு எச்.எம். சி.பி. ஹேரத் அவர்களினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2007,யூலை 13 ஆந் திகதியிடப்பட்ட இல. 834 மற்றும் கொழும்பு பிரசித்த நொத்தாரிசு கே.என். பி. பெரேரா அவர்களினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2011, மே மாதம் 24 ஆந் திகதியிடப்பட்ட இல. 1517 ஆகிய ஈட்டு முறிகளின் மீதான

கொடுப்பனவை செலுத்த கடமைப்பட்டுள்ள இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் முறையாக கூட்டிணைக்கப்பட்டதும் அதனது பதிவு செய்யப்பட்ட அலுவலகத்தினை இல.37, கம்மான வீதி, மஹரகமவில் கொண்டதுமான விஜய எஞ்சினியரிங் அன்ட் கொன்ஸ்க்ஷன் ( பிரைவேட்) லிமிடெட் மற்றும் இல. 37, கம்மான வீதி, மஹரகமவைச் சேர்ந்த பாதுக்காகே தொன் துஷால் விஜேகுணவர்தன மற்றும் பாதுக்காகே தொன் பிரியால் விஜேகுணவர்தன ஆகிய அடமானம் வைத்தவர்களான இருவரும் உரிய கொடுப்பனவைச் செலுத்தத் தவறியுள்ளனர்.

இலங்கை கொமர்ஷல் வங்கி பீஎல்சீ இனால் எனக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தின் கீழ் 2023, ஒற்றோபர் மாதம் 02ஆந் திகதி திங்கட்கிழமை மு.ப. 10.00 மணிக்கு அதே இடத்தில் பகிரங்க ஏல விற்பனையில் விற்பனை செய்கிறேன்.

**ஆதனத்தினை அடைதல்** .- கெஸ்பேவ சந்தியிலிருந்து (கொழும்பு- ஹொரண பிரதான வீதியில் கொழும்பு நகர எல்லையிலிருந்து சுமார் 14.50 கி.மீ. தூரத்தில்) ஹொரண வீதி வழியே சுமார் 2. கி.மீ. தூரம் சென்று வலது பக்கமாக பசால் மாவத்தையில் திரும்பி சுமார் 1.4 கி.மீற்றர் தூரம் சேமக்காலை வரை சென்று சேமக்காலை முடிவில் வலது பக்கமாக உள்ள கொங்கிறீட் வீதியில் அந்த வழியே சுமார் 150 மீற்றர் செல்ல இந்த காணியை உங்களுடைய இடது கைப்பக்கமாக காண்பீர்கள்.

2 ஆவது ஏலம்

உரிமம் பெற்ற நில அளவையாளர் என்.பி.எல்விட்டிகல அவர்களினால் தயாரிக்கப்பட்ட 2004, திசெம்பர் 30 ஆந் திகதிய வரைபட இல. 2443 இல் பங்கீட்டு வரையறுக்கப்பட்ட காணியின் லொட் 1 எனக் குறிப்பிடப்பட்ட ஆன்டிறிஸ்கேவத்தை என அழைக்கப்படும் காணித்துண்டு, அதனுடன் கட்டிடங்கள், மற்றும் அதன் மீது நிற்கும் எல்லாவற்றையும் சேர்ந்து பன்னிப்பிட்டி கிராமத்தில் கம்மான வீதியில் மதிப்பீட்டிலகக்ம் 37 ஐக் கொண்ட மேற்சொல்லப்பட்ட லொட் 1 காணித்துண்டானது- வடக்கில்: கே.டி. மர்தலலிஸ் இனால் உரிமை கோரப்படும் காணியினாலும்; கிழக்கில்: கே.டி. கரோலின் நோனா மற்றும் கே.டி. லியனோரிஸ் அப்புஹாமி ஆகியோரினால் உரிமை கோரப்படும் காணியினாலும்; தெற்கில்: கே.டி. லியனோரிஸ் அப்புகாமி மற்றும் பி.ஏ.டி. ஜொகானிஸ் விஜேரத்ன ஆகியோரினால் உரிமை கோரப்படும் காணியினாலும் ;மேற்கில்: வரைபட இல. 722 இல் உள்ள லொட் E , D மற்றும் B இனாலும் எல்லைப்படுத்தப்பட்டிருப்பதுடன் காணியானது சொல்லப்பட்ட வரைபட இல. 2443 படி முப்பத்தேழு தசம் ஆறு பூச்சியம் பேர்ச் ( 0ஏ.0றூ.37.60பே.) விஸ்தீரணத்தினை கொண்டதுமாகும்.

மேலே கூறிய சட்ட உரிமையுடன் பின்வரும் வீதி ஒதுக்கீடும் கீழே விவரிக்கப்பட்டுள்ளது.

வரைபட இல. 722 இல் பங்கீட்டு வரையறுக்கப்பட்ட காணியில் லொட் D ( தெருவிற்கான ஒதுக்கீடு 15 அடி அகலமாகும்) எனக் குறிப்பிடப்பட்ட ஆன்டிறிஸ்கேவத்த என அழைக்கப்படும் காணித்துண்டு - வடக்கில்: ஒரே காணியின் லொட் A மற்றும் B இனாலும்; கிழக்கில்: அதே காணியின் லொட் C இனாலும்; தெற்கில்: அதே காணியின் லொட் E இனாலும்;மேற்கில்: கம்மான வீதியினாலும் எல்லைப்படுத்தப்பட்டிருப்பதுடன் காணியானது சொல்லப்பட்ட வரைபட இல. 722 இன் படி ஆறு தசம் எட்டு பேர்ச் (0ஏ.0றூ.6.8பே.) விஸ்தீரணத்தினை கொண்டிருப்பதுடன் தெல்கந்த- நுகேகொடை காணிப் பதிவகத்தில் M 2276/08 இன் கீழ் பதிவு செய்யப்பட்டதுமாகும்.

கொழும்பு பிரசித்த நொத்தாரிசு எச்.எம். சி.பி. ஹேரத் அவர்களினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட இலங்கை கொமர்ஷல் வங்கி பீஎல்சீ உடனான 2021, யூலை 19 ஆந் திகதியிடப்பட்ட இல. 4495 ஈட்டு முறி மீதான கொடுப்பனவைச் செலுத்த கடமைப்பட்டுள்ள விஜய எஞ்ஜினியரிங் அன்ட் கொன்ஸ்ரக்ஷன் ( பிரைவேட் ) லிமிடெட் மற்றும் இல. 47, கம்மான வீதி, மஹரகமவைச் சேர்ந்த அடமானம் வைத்தவரான பதுக்காகே தொன் ஷமல் விஜேகுணவர்தன என்பவர் கொடுப்பனவை செலுத்தத் தவறியுள்ளார்.

இலங்கை கொமர்ஷல் வங்கி பீஎல்சீ இனால் எனக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தின் கீழ் 2023, ஒற்றோபர் மாதம் 02ஆந் திகதி திங்கட்கிழமை மு.ப. 11.30 மணிக்கு அதே இடத்தில் பகிரங்க ஏல விற்பனையில் விற்பனை செய்கிறேன்.

**ஆதனத்தினை அடைதல்** .- மஹரகம நகரின் மத்தியிலிருந்து அவிசாவளை வீதி வழியே சுமார் 1 கி.மீ. தூரம் சென்று வலது பக்கமாக கம்மான வீதியில் திரும்பி மேலும் 300 மீற்றர் சென்று நில அளவை வரைபடத்தில் காட்டப்பட்டவாறு இடது பக்கமாக திரும்பி 15 அடி அகலமுள்ள தனிப்பட்ட பாதையில் சென்றால் அது இந்த ஆதனத்தின் வாயிலில் முடிவடையும்.

தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்காக .- 2023 ஆம் ஆண்டு யூலை மாதம் 07 ஆந் திகதியிட்ட அரசாங்க வர்த்தமானியையும் மற்றும் "திவயின", " த ஐலன்ட்", "வீரகேசரி" மற்றும் "தினகரன்" ஆகிய பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**கட்டணம் செலுத்தும் முறை**: வெற்றிபெற்ற கொள்வனவாளர் ஏல முடிவில் பின்வரும் தொகைகளை பணமாக செலுத்த வேண்டும்.-

(1) கொள்வனவு விலையின் 10% (பத்து சத வீதம்) ;
(2) உள்ளூராட்சி மன்றத்திற்கு செலுத்த வேண்டிய விற்பனை வரி 1% (ஒரு சதவீதம்) ;
(3) ஏலதாரரின் தரகுப் பணம் 2 1/2 % (இரண்டரை வீதம்) கொள்வனவு விலையுடன் சேர்த்து தரகுக் கட்டணம் மற்றும் பொருத்தமான வரிகள் மீதான );
(4) எழுதுவினைஞர் மற்றும் முரசறைவோர் கட்டணமாக ரூபா 1,000.00;
(5) விற்பனை செலவு மற்றும் ஏனைய வேறு கட்டணங்கள் ஏதாவது இருப்பின்;
(6) விற்பனை நிபந்தனைகளுக்கான நொத்தாரிசுவின் கட்டணம் ரூபா 2,000.00.

கொள்வனவு விலையின் மிகுதி 90% உடன் விற்பனை திகதியின் பின் 30 நாட்களுக்குள் செலுத்த வேண்டிய சட்ட

ரீதியான விதிப்பனவுகள் , தீர்வைகள், வரிகள் அல்லது இலங்கை அரசாங்கத்தினால் அல்லது வேறு ஏதாவது அதிகார சபையினால் அவ்வப்போது விதிக்கப்படுகின்ற கட்டணங்களும் செலுத்தப்படல் வேண்டும்.

உறுதிகளையும் ஏனைய சம்பந்தப்பட்ட ஆவணங்களையும் பார்வையிடுவதற்கு - கடன் மீட்புத் திணைக்களம், இலங்கை கொமர்ஷல் வங்கிபீஎல்சீ, இல. 21, சேர் ராஸிக் பரீட் மாவத்தை, கொழும்பு 01.

தொலைபேசி +094(0) 112353722.

இலங்கை கொமர்ஷியல் வங்கி பீஎல்சீ,
நகர அலுவலகம்,
இல. 98, யோர்க் வீதி, கொழும்பு -01.
தொலைபேசி +094(0) 112432113/+094(0) 112486946.
தொலைநகல்: 01123264442.

* மேற்குறிப்பிட்ட ஏல விற்பனையை முன்னறிவித்தலின்றி நிறுத்தி வைக்கும்/இரத்துச் செய்யும் உரிமை வங்கிக்கு உண்டு.

* ஏலமானது கொவிட் 19 நெறிமுறைகளுக்கு அமைவாக சுகாதார அமைச்சினால் வெளியிடப்பட்ட கடுமையான வழிகாட்டல்களுக்கு ஏற்ப நடைபெறும்.

டலஸ் கெலார்ட்,
உரிமம் பெற்ற ஏல
விற்பனையாளர்.

இல. 146/3,
கல்தேரா கார்டின்ஸ்,
கீழ் துட்டகைமுனு வீதிக்கு எதிரில்,
கொஹூவல.
தொலைபேசி: 011- 4302622, 011- 4302623.
மின்னஞ்சல் : aucslk@gmail.com

09- 254

---

## ஹற்றன் நெஷனல் வங்கி பீ.எல்.சீ.—தெஹிவளைகிளை

பெறுமதிமிக்க ஆதனம் ஏல விற்பனை

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழான விற்பனை அறிவித்தல்

சுனேத்ரா தமயந்தி சிறிவர்தன காமாச்சிகே கடப்பாட்டாள ராக அடகு வைத்த ஆதனம் குறித்து இத்துடன் கீழே குறிப்பி டப்பட்டுள்ள அட்டவணையில் மேலதிகமாக விபரிக்கப்பட்டுள்ளது டன், கொழும்பு பிரசித்த நொத்தாரிசு யு.எஸ்.கே.ஹேரத்தினால் எழுதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2020.01.23 ஆந் திகதியிடப்பட்ட 6695 என்ற இலக்க ஈட்டு முறியினால் ஹற்றன் நெஷனல் வங்கி பீஎல்சீ தாபனத்திற்கு ஈடுவைக்கப்பட்டுள்ள கீழே விபரிக்கப் பட்டுள்ள ஆதனம்.

ஹற்றன் நெஷனல் வங்கியினால் எனக்களிக்கப்பட்ட அதிகாரத் தின் கீழ் 2023 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 10 ஆந் திகதி மு.ப. 9.30 மணிக்கு என்னால் அக்காணி அமைந்துள்ள இடத்திலேயே பகிரங்க ஏல விற்பனையில் விற்கப்படும்.

மேல் மாகாணம், கம்பஹா மாவட்டத்தில் சியனே கோரளையின் அதிகாரி பத்துவில் உள்ள பியகம பிரதேச சபையின் மாகொல உப அலுவலகத்திலுள்ள பியகம பிரதேச செயலாளர் பிரிவு மற்றும் கோணவல 277A கிராம அலுவலர் பிரிவில் உள்ள கோணவலவில் அமைந்துள்ள ஹேனவத்த வீதி, மதிப் பீட்டு வரி இலக்கம் 30 ஐக் கொண்டுள்ள மில்லகஹாவத்த, ஹிக்ககஹாவத்த மற்றும் ஹேனேவத்த என்றழைக்கப்படும் காணி கட்டடங்கள் மற்றும் அதிலமைந்துள்ள எல்லாம் உரிமம் பெற்ற நில அளவையாளர் எல்.என். பர்னாண்டோவினால் தயாரிக்கப்பட்ட 2004, பெப்புருவரி 10 ஆந் திகதியிடப்பட்ட 1924 என்ற இலக்க வரைபடத்தில் குறித்துக் காட்டப்பட்டிருக்கும் காணித்துண்டு 02.

**தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்காக**.- 2023.06.30 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும் மற்றும் 2023.07.24 ஆந் திகதிய "மவ்பிம", "டெயிலி மிரர்", மற்றும் "தினக்குரல்" ஆகிய பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**ஆதனத்திற்கு உட்பிரவேசிக்கும் வழி**.- கொழும்பில் இருந்து கண்டி வீதியூடாக பேலியகொட "Y" சந்தி அல்லது 4 ஆம் மைற்கல் என அழைக்கப்படும் சந்தியில் இருந்து வலது பக்கம் திரும்பி பியகம வீதி ஊடாக சுமார் 4.3 கி.மீற்றர் தூரம் சென்றதும் களனி விகாரையைக் கடந்து ரேந்த வத்த வரை சென்று இடது பக்கத்துக்குத் திரும்பி கொஹொல்வில வீதி ஊடாக சுமார் 700 மீற்றர் தூரம் பயணிக்கவும். அத்தோடு வலதுக்குத் திரும்பி ரணவிரு மல்தெனியவீதியில் "Y" சந்தி வரை 100 மீற்றர் தூரம் பயணித்து இடதுக்குத் திரும்பி ஹேனவத்த என்றழைக்கப்படும் வீதியில் 100 மீற்றருக்கு கொஞ்சம் கூடுதலாக "T" சந்தி வரைக்கும் சென்று நேராக 12 அடி அகலமுள்ள தனியார் வீதியில் சுமார் 30 மீற்றர் சென்றதும் உரிய காணியை அடையலாம். வரிமதிப்பீட்டு இலக்கம் 30, இது அந்த ஒழுங்கையில் இடது கைப்புறத்தில் அமைந்துள்ள 3 ஆவது தொகுதி ஆகும்.

**கட்டணங்கள் செலுத்தும் விதம்**.-

(1) கொள்வனவு விலையின் 10% (பத்து சதவீதம்);
(2) உள்ளூர் அதிகார சபைக்கு செலுத்த வேண்டிய தேசிய விற்பனை வரி 1% (ஒரு சத வீதம்) ;
(3) ஏலதாரரின் தரகுப் பணமாக விற்பனை விலையின் 2 1/2% ( இரண்டரை சதவீதம்);
(4) எழுதுவினைஞர் மற்றும் கூவுவோர் கட்டணம் 2000.00 ரூபா;
(5) விற்பனைச் செலவுடன் வேறு ஏதும் கட்டணங்கள் இருப்பின் அந்த தொகையும்;
(6) விற்பனை அத்தாட்சிப் பத்திரம் மற்றும் முத்திரைக் கட்டணங்கள்.

கொள்வனவு விலையின் மிகுதி 90% ஐ விற்பனை திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் ஹற்றன் நெஷனல் வங்கி பீ.எல்.சீ. இற்கு காசாகச் செலுத்த வேண்டும். சொல்லப்பட்ட எஞ்சிய தொகை மேற்குறிப்பிடப்பட்டவாறு 30 நாட்களுக்குள் செலுத்தப்படாவிட்டால் ஏற்கனவே செலுத்தப்பட்ட கொள்வனவு

விலையின் 10% வீதத்தை தண்டப்பணமாக அறவிடவும் ஆதனத்தை மீள் விற்பனை செய்யவும் வங்கிக்கு அதிகாரமுண்டு.

உரித்து உறுதிகளையும் அவை தொடர்பான வேறு ஆதனங்களையும் பெற்றுக்கொள்ள "சிரேஷ்ட முகாமையாளர்- (வணிக அறவீடுகள்)", ஹற்றன் நெஷனல் வங்கி பீ. எல். சீ., இல. 479, ரீ. பி. ஜாயா மாவத்தை, கொழும்பு 10" எனும் முகவரியில் செலுத்த வேண்டும்.
தொலைபேசி இல.: 011-2661866 , 011-2661828.

ஈ.எஸ். ராமநாயக்க,
சமாதான நீதவான் (தீவு முழுவதற்கும்),
நீதிமன்ற ஆணையாளர்,
சிரேட்ட விலை மதிப்பிடுநர் மற்றும்
உத்தரவுபெற்ற ஏலதாரர் .

இல. 11/55, போகஹவத்த,
குடாபுத்கமுவ, அங்கொடை.
தொலைபேசி: 011- 2053286, 072- 3207533,
076- 9217329.

98- 271

---

**சம்பத் வங்கி பீஎல்சீ**

(முன்பு சம்பத் வங்கி லிமிடெட் என அழைக்கப்பட்டது)

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 09 ஆம் பிரிவின் கீழான விற்பனை அறிவித்தல்

டபிள்யூ. எம்.ஐ.விஜேசிங்ஹ
கணக்கு இல.: 0065 5000 8864

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 04ஆம் பிரிவின் கீழ் சம்பத் வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையினால் 2023.08.28ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக 2023.06.16ஆந் திகதிய இலங்கை வர்த்தமானியிலும் (Gazette) 2023.06.16ஆந் திகதிய "திவயின" (Divaina), "ஐலண்ட்" (Island), மற்றும் "தினக்குரல்" (Thinakkural) ஆகிய பத்திரிகைகளில் வெளியிடப் பட்ட அறிவித்தல்களுக்கிணங்க நிலுவை முதலான எட்டு கோடியே எண்பது இலட்சத்து முப்பத்து எட்டாயிரத்து நூற்று நான்கு ரூபா எழுபத்து ஒரு சதம் (ரூபா 8,80,38,104.71) 2023, பெப்புருவரி 15 ஆந் திகதி முதல் அறவிடப்பட வேண்டிய மொத்தத் தொகையைச் செலுத்தித் தீர்க்கும் திகதி வரை ஆறு கோடியே முப்பத்து ஒரு இலட்சத்து ஏழாயிரத்து எண் ணூற்று ஐம்பத்து எட்டு ரூபா மூன்று சதம் (ரூபா 6,31,07,858.03) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றிற்கு பதினொன்று தசம் ஐந்து வீதம் (11.5%) மேலும் பதினெட்டு இலட்சத்து அறுபத்து ஐந்தாயிரம் ரூபா (ரூபா 18,65,000.00) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றிற்கு நான்கு வீதம் (4%) மேலும் ஒரு கோடியே முப்பத்து ஏழு இலட்சத்து அறுபத்து ஓராயிரத்து இருநூற்று முப்பத்து ஐந்து ரூபா தொண்ணூற்று எட்டு சதம் (ரூபா 1,37,61,235.98) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றிற்கு ஆறு தசம் ஒன்பது மூன்று வீதம் (6.93%) வருமதியாகவுள்ள வட்டியுடன், விளம்பரச் செலவுகள், ஏனைய செலவுகள், ஏதேனும் கட்டணங்கள் செலுத்தப்பட்டிருப்பின் அவற்றையும் கழித்து அறவிட்டுக் கொள்வதற்கு கூறப்பட்ட ஈட்டு முறி இலக்கங்கள் 2924 மற்றும் 3862 இன் மீது பிணையாக வைக்கப்பட்டுள்ள சொத்துக்கள், நிலமனைகளை கொழும்பு உத்தரவுபெற்ற ஏலதாரர்களான பீ. கே. ஈ. சேனாபத்தி என்பவர்கள் மூலமாக 2023.10.04 ஆந் திகதி இல.2015/16 எனும் வரைபடத்தின் லொட் இலக்கங்கள் 1 மற்றும் 2 பி.ப. 1.30 மணி முதல், இல. 1464 எனும் வரைபடத்தின் இல.1, பி.ப. 3.30 மணி முதல் அதே இடத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் என இத்தால் தீர்மானிக்கின்றது.

**அட்டவணை**

1. மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம் , அலுத்குரு கோரளே தாசிய பத்துவின் மினுவன்கொடை பிரதேச செயலாளர் பிரிவு மற்றும் பிரதேச சபை எல்லைகளுக்குள் ஹொரம்பெள்ள வடக்கு கிராம அலுவலர் பிரிவின் ஹொரம்பெள்ள கிராமத்தில் அமைந்த "ஹொரம்பெள்ள எஸ்டேட்" என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நில அளவையாளர் W. P. S. விக்ரமசிங்ஹ என்பவரால் தயாரிக்கப்பட்ட 2003, மே 30 ஆந் திகதியிடப்பட்ட இல. 1464 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் 1 என குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன : வடக்கு : விக்ரமசிங்ஹ மற்றும் இந்ராணி ராஜகருணா என்பவர்களின் காணிகள்; கிழக்கு : கே. இந்ராணி ராஜகருணா என்பவரின் காணி மற்றும் வீதி (பி. ச.) ; தெற்கு : லொட் 2 மற்றும் ; மேற்கு: சுனில் சந்ரசிறியின் காணி, ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் ஒரு ஏக்கர் (01ஏ. 00றூ. 00பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும், நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் இல. 1464 எனும் வரைபடத்திற்கு அமைவாக கம்பஹா காணிப் பதிவகத்தில் பரிமாணம்/பக்கம் K 520/19 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

2. மத்திய மாகாணம், மாத்தளை மாவட்டம், வகபனாஹா பல்லேசிய பத்துவின் தம்புள்ளை பிரதேச செயலாளர் பிரிவு மற்றும் மாநகர சபை எல்லைகளுக்குள் பாதெனிய கிராம அலுவலர் பிரிவின் பாதெனிய கிராமத்தில் அமைந்த "கலவெள்யாய' என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவு பெற்ற நில அளவையாளர் W. A. பிரேமரத்ன என்பவரால் தயாரிக்கப்பட்ட 2015, சனவரி 12 ஆந் திகதியிடப்பட்ட இல. 2015/16 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து

எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் இலக்கங்கள் 1 மற்றும் 2 என குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன - வடக்கு: இதே காணியின் எஞ்சிய பகுதி ; கிழக்கு : வீதி ; தெற்கு : வீதி மற்றும் மேற்கு : ஆறு ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் ஒரு ஏக்கர் (01ஏ. 00றூ. 00பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும், நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் இல.2015/16 எனும் வரைபடத்திற்கு அமைவாக மாத்தளை காணிப் பதிவகத்தில் பரிமாணம்/பக்கம் L 98/131 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கம்பனிச் செயலாளர்.

09 - 320

---

### சம்பத் வங்கி பீஎல்சீ

(முன்பு சம்பத் வங்கி லிமிடெட் என அழைக்கப்பட்டது)

### 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 09 ஆம் பிரிவின் கீழான விற்பனை அறிவித்தல்

எச்.ஆர்.கே. டபிள்யூ.கே. குமார மற்றும் எச்.ஆர்.கே.விபுலசேன
கணக்கு இல.: 0060 5000 9538

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 04ஆம் பிரிவின் கீழ் சம்பத் வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையினால் 2020.10.29ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக 2020.11.13ஆந் திகதிய இலங்கை வர்த்தமானியிலும் (Gazette) 2020.11.13ஆந் திகதிய ''திவயின'' (Divaina), ''ஐலண்ட்'' (Island), மற்றும் ''தினக்குரல்'' (Thinakkural) ஆகிய பத்திரிகைகளில் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கிணங்க நிலுவை முதலான ஒரு கோடியே எழுபத்தி இரண்டு இலட்சத்து எழுபத்து மூவாயிரத்து முந்நூற்று பத்து ரூபா அறுபத்தொன்பது சதம் (ரூபா 1,72,73,310.69) 2020, செத்தெம்பர் 11 ஆந் திகதி முதல் அறவிடப்பட வேண்டிய மொத்தத் தொகையைச் செலுத்தித் தீர்க்கும் திகதி வரை ஒரு கோடியே ஐம்பத்தைந்து இலட்சம் ரூபா (ரூபா 1,55,00,000.00) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றுக்கு பதின் மூன்று தசம் ஐந்து வீதம் (13.5%) வருமதியாகவுள்ள வட்டியுடன், விளம்பரச் செலவுகள், ஏனைய செலவுகள், ஏதேனும் கட்டணங்கள் செலுத்தப்பட்டிருப்பின் அவற்றையும் கழித்து அறவிட்டுக் கொள்வதற்கு கூறப்பட்ட ஈட்டு முறி இலக்கங்கள் 354 மற்றும் 1575 இன் மீது பிணையாக வைக்கப்பட்டுள்ள சொத்துக்கள், நிலமனைகளை கொழும்பு உத்தரவுபெற்ற ஏலதாரர்களான பீ. கே. ஈ. சேனாபத்தி என்பவர்கள் மூலமாக 2023.10.03 ஆந் திகதி பி.ப. 3.30 மணி முதல் அதே இடத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் என இத்தால் தீர்மானிக்கின்றது.

#### மேற்குறிப்பீடு செய்யப்பட்ட அட்டவணை

ஊவா மாகாணம்,மொனராகலை மாவட்டம்,புத்தள கோரளே கதிர்காமம் பிரதேச சபை எல்லைகளுக்குள் மற்றும் பிரதேச செயலாளர் பிரிவிற்குள் மற்றும் கந்தசுரிந்து கம கிராம அலுவலர் பிரிவின் தெட்டகமுவ கிராமத்தில் அமைந்த ''தெட்டகமுவே ஹேன'' என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நில அளவையாளர் டபிள்யு. எஸ். கே. விக்னராஜா என்பவரால் தயாரிக்கப்பட்ட 2015, ஒற்றோபர் 31 ஆந் திகதியிடப்பட்ட இல. 2015-332 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் A எனக் குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன: வடக்கு: வீதி மற்றும் EPTP 25 லொட் 679 ; கிழக்கு : இதே காணியின் எஞ்சிய பகுதி ; தெற்கு : EPTP 25 லொட் 661 மற்றும் மேற்கு : இதே காணியின் எஞ்சிய பகுதி, ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் மூன்று றூட்கள் (0ஏ.3றூ.0பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும், நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் மற்றும் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் கூறப்பட்ட இல. 2015-332 எனும் வரைபடத்திற்கு அமைவானதாகும்.

கூறப்பட்ட லொட் A கீழே நேர்த்தியாக விபரிக்கப்பட்ட காணியின் மீள் அளவீடாகும்.

கூறப்பட்ட தெட்டகமுவ கிராமத்தில் அமைந்த ''தெட்டகமுவே ஹேன'' என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நில அளவையாளர் ரீ. பீ. அத்தநாயக்க என்பவரால் தயாரிக்கப்பட்ட 2005, செத்தெம்பர் 12 ஆந் திகதியிடப்பட்ட இல. M 805 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் 1 எனக் குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன: வடக்கு: வீதி மற்றும் EPTP 25 லொட் 679; கிழக்கு : இதே காணியின் எஞ்சிய பகுதி ; தெற்கு: EPTP 25 லொட் 661 மற்றும் மேற்கு : இதே காணியின் எஞ்சிய பகுதி, ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் மூன்று றூட்கள் (0ஏ.3றூ.0பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும், நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் மற்றும் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் கூறப்பட்ட இல. M 805 எனும் வரைபடத்திற்கு அமைவாக மொனராகலை காணிப் பதிவகத்தில் பரிமாணம்/ பக்கம் LDO/N06/115 இல் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கம்பனிச் செயலாளர்.

09-319

**ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீ. – ராஜகிரிய கிளை**

பெறுமதிமிக்க ஆதனம் ஏல விற்பனை

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழான விற்பனை அறிவித்தல்

